587

REGISTERED No. M. 6165.        அணா. 2

# பத்ஹுல் இஸ்லாம்

# FATH-HUL-ISLAM

OFFICE OF THE REGISTRAR OF BOOKS
1 - FEB 1955
MADRAS

587
1-55

மாத பத்திரிகை

பிப்ரவரி 1955.

| விஷயம். | பக்கம். |
|---|---|
| இறைவனை வணங்கத் தொழுகையே சிறந்தது | 1 |
| தென் இந்திய முஸ்லிம் கல்விக் கழகம் | 8 |
| சர்வாதிகாரத்திற்குப் பலியான தியாகி ஸலீம் மௌலவி K. H. அப்துல் கரீம் (நூரிய்யி) பேரையூர் | 14 |
| இரத்தச் சின்னம் (தொடர்கதை) ... ... | 17 |
| உணவு உண்பது எதற்கு (மஆலி ஸாஹிப் பாகவி) (சிறுவர் பகுதி) | 25 |
| காஜா நிஜாமுத்தீன் ஒளலியா ஜீவிய சரித்திரம் (...யம் பேட்டை S. அப்துல் ரஜாக் ஸாஹிப்) | 29 |

...ல் இஸ்லாம் ஆபீஸ் :
...நெ. 20, ஹைரோட், திருவல்லிக்கேணி,
மதராஸ் 5.

3L
Q7ஊ211, N24F5
N55
187039

# பத்ஹுல் இஸ்லாம்

சந்தா விபரம்: இந்தியா, பாகிஸ்தான், ஸிலோனுக்கு

| | | |
|---|---|---|
| வருஷ சந்தா | ரூ. | 1–8–0 |
| தனிப் பிரதி | அணா. | 0–2–0 |
| மற்ற வெளி நாடுகளுக்கு வருஷ சந்தா | ரூ. | 2–0–0 |

எல்லா ஊர்களிலும் ஏஜெண்டுகள் தேவை. எல்லா விஷயங்களுக்கும் கீழ்கண்ட விலாசத்திற்கு எழுதவும்.

மானேஜர்,
பத்ஹுல் இஸ்லாம்,
20, ஹைரோட், திருவல்லிக்கேணி, மதருஸ் 5.


## கைத்தொழில் சம்பாதனை வழிகள்.

சொற்ப பணத்தை வைத்துக் கொண்டு ஏதாவது ஒரு சிறு வியாபாரம் செய்யலாம் என்ற உத்தேசத்துடன் இருக்கும் ஆட்களுக்கு தேவைப்படும் விஷயங்களை நூற்றுக் கணக்காக இந்த புஸ்தகம் கொண்டுள்ளது. இந்த புஸ்தகத்தில் உள்ள முக்கிய விஷயங்களுக்கு அட்டவணை அகராதி முறையில் 16 பக்கங்கள் கொண்டது சேர்க்கப்பட்டிருக்கிறது.

இந்த புஸ்தகம் 224-பக்கங்கள் கொண்டது. இதை பெதர்வைட் காகிதத்தில் அச்சிட்டு கேர்த்தியான கலிகோ பைண்டு செய்யப்பட்டிருக்கிறது. விலை ரூ. 2—8—0

ஸிலோன் விலை ரூ. 3—0—0

கிடைக்குமிடம் :—

ஹாஜி M. A. ஷாஹுல் ஹமீது & ஸன்ஸ்
நெ. 20, ஹைரோடு, திருவல்லிக்கேணி, மதருஸ் 5.

# الاسلام

# பத்ஹுல் இஸ்லாம்.

பிப்ரவரி—1955.


OFFICE OF THE REGISTRAR OF BOOKS
1 - FEB 1955
MADRAS

## இறைவனை வணங்கத் தொழுகையே சிறந்தது.

இப்பரந்த பிரபஞ்சத்தில் மனிதப் பிறவி தோன்றிய காலமுதல், நபிமார்களும் ரஸூல்மார்களும், மனித சமூக வழிகாட்டிகளாக இறைவனால் அனுப்பப்பட்டு, மக்களுக்கு தெய்வ பக்தியையும் வணங்கும் முறையையும் போதித்து வந்துள்ளார்கள். உலகில் தோன்றி வியாபித்த மதங்கள் அனந்தமாகும். அம்மதங்கள் ஒவ்வொன்றிலும், தெய்வத்தை வணங்கித் தொழுகும் முறை, தனித்தனி விதமாக போதிக்கப்பட்டும் அனுஷ்டிக்கப்பட்டும் வந்துள்ளது.

ஆண்டவன் புறத்திலிருந்து ஞானோதயமாகிய வஹீ அருளப்பட்டு நபிகளாகவும் ரஸூல்களாகவும் திகழ்ந்தவர்கள், இறைவனை ஏக தெய்வமாக எண்ணி, அவ்வொரே ஆண்டவனையே வணங்கி உதவிகோர வேண்டுமென்று வற்புறுத்திவந்தார்கள். கால தேச வர்த்தமானத்துக்கியைந்த முறையில், ஆங்காங்கு அவ்வப்போது, சில போலிபேர்வழிகளும் வேஷதாரிகளும் பொய்த்தீர்க்கதரிசிகளும் ஆஷாட பூதிகளும் தோன்றி, தங்களை 'நபி' என்றும் தெய்வாசம் பொருந்திய 'புனிதர்' என்றும் சொல்லி வாதாடி, ஜனங்களை ஏமாற்றி தங்கள் சுயப்போக்குப்படி தனி மார்க்கத்துக்கு அழைத்து வந்தார்கள்.

அப்படிப்பட்ட போலி நபிகளும் ஆஷாடபூதிகளும் கூட, மக்கள் வணங்கித் தொழவேண்டிய தொழுகை முறையை ஏற்படுத்தியுள்

ளார்கள். ஆகையால் தான் இன்றைய உலகில் பொதுப்படையாக தொழுகை முறையானது பற்பலவிதமாக இருந்துவருகிறது. வணங்குதல், பூஜித்தல், தியானித்தல், வந்தித்தல், தொழுதல், நமஸ்கரித்தல், சாஷ்டாங்கம் புரிதல் என்ற ரீதியில் வணக்கமுறைகள் கணக்கிலடங்காததாகும். ஆனால், அவைகளின் தாராதரமும், விசேஷத்துவமும், குறிக்கோளும், பிரதம லக்ஷியமும்தான், அத்தொழுகை முறைகளில் எது சிறந்ததென்பதை மெய்ப்பித்துக்காட்டும்.

## 'நமாஸ்' என்பதென்ன ?

'நமாஸ்' என்பது பாரசீ பதம். ஆனால் அது உர்தூகாரர்களிடம் சர்வசாதாரணமாக வழங்கி வருகிறது. 'ஸலாத்' என்பது அரபுப்பதம். இஸ்லாமிய மக்களில் அரபு ஞானமுடையோர் யாவரும் 'ஸலாத்' என்ற பதத்தின் விழுமிய பொருளை நன்கு அறிவார்கள். ஆனால் நம் தமிழ் முஸ்லிம்கள் அந்த 'நமாஸ்' என்பதற்கும் 'ஸலாத்' என்பதற்கும் ஈடாக "தொழுகை" என்ற பதத்தையே உபயோகித்து வருகிறார்கள். ஆகையால் இக்காலை முஸ்லிம்கள் 'தொழுகை' என்று சொல்வது ஸலாத்தையும், நமாஜையுமே குறிப்பதாய் இருக்கிறது.

நம் இஸ்லாமிய சம்பிரதாயப்படி தொழுகை என்றால், முஸ்லிம்கள் தம் இஸ்லாமியக் கட்டளைப் பிரகாரம், அதாவது குர்ஆன் ஹதீது போதனைப்பிரகாரம், அல்லும் பகலும் ஐங்காலம் குறிப்பிட்ட நேரங்களில் குறிப்பிட்ட மாதிரி விசேஷமாய் நிறைவேற்றிவரும் வணக்கமுறையென்றே பொதுப்படையாக முஸ்லிம்களெல்லாரும் நிர்ணயங்கொண்டிருந்து வருகிறார்கள். ஆம், ஒவ்வொரு முஸ்லிமும் அவன் ஆகிலாகிய புத்தி சுவாதீனனாகவும், சிறு பிராயம் நீங்கிப் பாலிகாகிய வயதுவந்தவனாகவும் இருந்தால்,—ஆணும் பெண்ணும் இருசாராரும்—காலையிலும் நடுப்பகலிலும் பிற்பகலிலும் மாலையிலும் இரவிலும், குறிப்பான முறையில் பர்லான கடமையாகத் தொழுது வருகிறார்களே அதுதான் சரியான சிறப்பான வணக்க முறை யென்பதில் சந்தேகமில்லை.

## குர்ஆன் கட்டளையும் தொழுகையும்.

'ஸலாத்' என்னும் தொழுகையைப்பற்றி நம் திருமறையான திருக் குர்ஆனில் அநேக இடங்களில் வற்புறுத்தியும் விளக்கியும் கூறப்பட்டிருக்கின்றன:—

(1) நிச்சயமாக தொழுகை(ஸலாத்)யானது நம்பிக்கைக் கொண்ட (மூமினான)வர்கள் மீது நேரங்குறிக்கப்பட்ட கடமை யாகிவிட்டது. (ஸூரா: நிஸா)

(2) நன்னம்பிக்கை கொண்டவர்களே, ஸலாத் (என்னும் தொழுகையைக்) கொண்டும், ஸப்ரு (என்னும் பொறுமையைக்) கொண்டும் ஆண்டவனிடம் உதவி தேடிக்கொள்ளுங்கள். நிச்சயமாக ஆண்டவன் பொறுமை சாலிகளுடனேயே இருக்கிறான். (ஸூரா: அல்பகரா)

(3) தொழுகையை (ஸலாத்தை) நிலைநிறுத்துங்கள்; ஜகாத்தும் கொடுங்கள்; குனிந்து வணங்குபவர்களோடு (சேர்ந்து) நீங்களும் குனிந்து வணங்குங்கள். (ஸூரா: அல்பகரா)

(4) தொழுகை (ஸலாத்)கள்பால் நன்கு ஞாபகம் வைத்திருங்கள். மத்திய (இரவு) தொழுகை மீதும் (ஞாபகம் வைத்திருங்கள்). (ஸூரா: அல்பகரா)

(5) தொழுகையை நேர்மையாக நிறைவேற்றுங்கள்; இறைவனை (அதிகம்) பயந்து தொழுகுங்கள். அவ்விறைவன் முன்னிலையிலேயே நீங்கள் (இறுதியாக) கியாமத்தில் எழுப்பப்பட்டு நிறுத்தப்படப் போகிறீர்கள். (ஸூரா: அல் அன் ஆம்)

(6) தொழுகையை (நிலைத்து) நிறைவேற்றுங்கள்; ஜக்காத் (தானமும்) கொடுத்துவிடுங்கள். இது நிலைப்பாடான சன்மார்க்கமாகும். (ஸூரா: அல்பையினு)

(7) உம்முடைய இறைவனை (த்தொழுது) வணங்குவாயாக. மேலும் பலித் தியாகமும் செய்வாயாக, நிச்சயமாக உம்முடைய விரோதி (ஷைத்தான்) மகாகெட்டவனுவான். (ஸூரா: அல்கவ்தர்).

இவ்வாருக திருக்குர்ஆனில் 'ஸலாத்' என்னும் தொழுகையின் அத்தியாவசியத்தைப் பற்றியும் புனிதத்தைப் பற்றியும், அநேக இடங்களில் பற்பல ஆயத்துகளில் வற்புறுத்திக் கூறி யிருக்கிறுன், எல்லாம் வல்ல இறைவன் அல்லாஹ் !

## தொழுகையில் சிறந்தது எது ?

'ஸலாத்' என்ற பதம், குர்ஆன் ஷரீபில் பொதுப்படையாய் வணங்கும் பான்மையை யொட்டியே பிரஸ்தாபிக்கப்பட்டிருக்கிறது. ஏனெனின், பண்டைய நபிமார்களுடையவும் தீர்க்கதரிசிகளுடையவும் காலத்து ஜனங்களுடைய வணக்க முறைக்கும் ஸலாத் என்ற பதமே உபயோகிக்கப்பட்டிருக்கிறது.

இறுதி நபி ரஸூலே கரீம் முஹம்மத் (ஸல்) அவர்கள், 'ஸலாத்' என்ற முறையில், இஸ்லாமிய உம்மத்துகளாகிய முஸ்லிம்கள் அனுஷ்டிக்க வேண்டிய தொழுகை, இப்படிப்பட்ட முறையுடையதாகத் தான் இருக்க வேண்டும், இத்தகைய அவயவ அசைவுகளாகத்தான் இருக்க

187039

வேண்டும், அதன் கண் இத்தகைய பிரார்த்தனையும் இத்தகைய ஓதுதல்களும் தான் இருக்க வேண்டும் என்று கட்டு திட்டம் செய்து வழி முறை வகுத்துக் காண்பித்து விட்டார்கள்.

எனவே முஸ்லிம்களாகிய நாம், நபிகள் பெருமானார் முஹம்மத் (ஸல்) அவர்கள் தம் ஆக்ஞை மூலமாயும் அனுஷ்டான பூர்வமாயும் செய்து காட்டிக் கொடுத்த வணக்க விதி முறைகளைத் தவிர்த்து வேறு விதங்களில் (சிறு மாறுதலுடனோ பெரும் பேதகத்துடனோ) அனுஷ்டிக்கப்படும் வணக்க முறைகளை, நம் முஸ்லிம் இஸ்லாமியத் தொழுகையாக—ஸலாத்தாக, நமாஸாக, தொழுகையாக ஏற்றுக் கொள்ள முடியாது.

"ஆலயந் தொழுவது சாலவும் நன்று" என்று முஷ்ரிக்குகளும் காபிர்களும் சொல்லும் வணக்க முறை, நம் இஸ்லாமியத் தொழுகைக்கு நேர் முரண்பாடுடையதாகும். அவர்களும் தம் குபிரிய்யத்தான வணக்கத்தை தொழுகை என்று சொன்ன போதிலும், அது ஏக தெய்வத்துவத் தொழுகையாக மாட்டாது. விக்கிரகத் தொழும்பலாகும் அது.

## தேவாலயத் தொழுகை.

கிறிஸ்துவர்களும் தங்கள் தேவாலயங்களுக்குப் போய் தொழுதுக் கொள்கிறார்கள். ஆனால் அது எப்படிப்பட்ட தொழுகை என்பதை சிறிது சீர்தூக்கிப் பார்ப்போம்.

தேவாலயத்துள் ஒரு மேடை மீது சிலுவைக் குறியுடன் மனிதச் சிலை (இயேசு கிறிஸ்து உருவம்) வைக்கப்பட்டிருக்கிறது. அதற்குப் பக்கத்தில் பெண்சிலை (மேரியம்மை) உருவமும் வைக்கப்பட்டிருக்கிறது. அத்துடன் 'ஏஞ்சல்' என்னும் தேவத்தூதர் எனப்படும் சிறு குழந்தைகள் பறப்பது போன்ற பொம்மைகளும் வைக்கப்பட்டிருக்கின்றன. அவைகளை சுற்றி மெழுகுவர்த்திகள் எரிந்துக்கொண்டிருக்கும். பறங்கிச் சாம்பிராணித் தூபமும் எழுந்துப் பாவிக் கொண்டிருக்கும்.

அத்தகைய இயேசுவின் தேவாலயத்துக்குள் வணங்கச் செல்லும் கிறிஸ்துவத் தோழர்களும் தோழியர்களும், அங்கு அச்சிலைகள் முன் மண்டியிட்டு வணங்கி, துக்கித்து கண்ணீர் விட்டு, குறை இறைந்து பூஜித்துத் 'தொழுகை' புரிகிறார்கள்.

இது இஸ்லாமிய ஏகதெய்வ வணக்கத்துக்கு மாறுபாடானதாகும். இதேமாதிரி தான் யூதர்களும், மஜூஸியர்களும், புத்தர்களும், ஜெயினர்

களும், தத்தம் மதாசாரியர்களும் குருமார்களும் காட்டிக் கொடுக்கும் முறையில், பற்பல வகைகளில் வணங்கிப் பணிந்து எழுந்து பஜித்துப் பூஜித்து தொழுகை நிறைவேற்றுகின்றனர். இதெல்லாம் இஸ்லாமியத் தொழுகையாகிய 'ஸலாத்'துக்கு ஒப்பானதாக மாட்டாது.

## இஸ்லாமியத் தொழுகை.

இஸ்லாமியத் தொழுகையாகிய 'ஸலாத்'தில் சில விசேஷ அம்சங்கள் இருக்கின்றன. கை தூக்குவதும், கைகட்டி நிற்பது, குனிவதும், எழுவதும், சிரசை தரையில் வைத்து வணங்கும், அமர்ந்துப் பணிவது மட்டும் இஸ்லாமியத் தொழுகையின் தாத்பர்யமில்லை. அத்தொழுகையின் ஒவ்வோர் அசைவிலும் அம்சத்திலும், எல்லாம் வல்ல இறைவனாகிய அல்லாஹு தஆலாவின் அரூபப் பிரதர்சனத்தை மனத்துள் நிலையாய் நிறுத்தி, வாக்கு மனம் காய சுத்தியோடும், பயபக்தியோடும், உள் அச்சப்பாட்டோடும், ஓத வேண்டியவைகளைத் திருத்தமாய் ஓதிப் பிரார்த்தித்து, ஆண்டவனுக்கு அடியான் தெரிவித்துக் கொள்ளும் தூயத் தொழுகை வணக்கமே 'ஸலாத்' என்றும் 'நமாஸ்' என்றும் நம்மால் சொல்லப்படுவது.

எனவே ஒரு முஸ்லிம், மனது ஒன்றை நாட, வாய் ஒன்றை ஓத, கண் ஒன்றைப் பார்க்க, கால் கைகள் ஒன்றைச் செய்ய, ஏனோ தானோ வென்று அனுஷ்டிக்கும் தொழுகை மெய்யான ஸலாத் ஆகமாட்டாது; அதில் பயனும் இல்லை.

"தங்களுடைய தொழுகையிலே மன உருக்கமும் உள் அச்சப்பாடும் உடையவர்களாய் தொழுகிறார்களே அப்படிப்பட்ட மூமினான பக்தர்கள்தான், (பரம) ஜெயம் பெற்றவர்களாவர்" (அல் குர்ஆன்)

இந்த வேத வாக்கியப் போதனைப்படி தொழுதுக் கொள்ளும் மெய்யன்பர்களின் 'குஷூஃ-குலூ' ஆன தொழுகைதான் ஸலாத்; அப்படிப்பட்ட ஸலாத் தான் மூமின்களின் மிஃராஜ் ஆகும். "அஸ் ஸலாத்து மிஃராஜுல் மூமினீன்" என்பதின் தாத்பர்யம் இதுதான்.

## தொழாத வேடதாரிகள்!

இது இங்ஙன மிருக்க, சில முஸ்லிம் எனப்படுவோர், ஞான வேஷதாரிகளாகிய சில பீர்களிடமும் மஷாயிக்களிடமும், ஏதோ முரீதும் இஜாஸத்தும் பெற்றுக் கொண்டு, தொழுகையைத் தொழ வேண்டிய

ஷரீஅத்து முறையில் தொழாமல், திக்ரும் பிக்ரும் அவ்ராதும் மட்டும் செய்து கொண்டு இருந்து விடுகின்றனர். "ஏன் ஹஜ்ரத் நீங்கள் பள்ளிவாசலுக்கு வந்து தொழுவதில்லை?" என்று கேட்டால், "மஃரிபா காரர்களாகிய எங்களுடைய தொழுகையே வேறு; அதெல்லாம் சாதர்ரண அஞ்ஞானிகளாகிய உங்களுக்குப் புரியாது" என்று சொல்லிப் போய் விடுவர்.

எவனொருவன் ஷரீஅத்தின் கட்டளைப்படி, இஸ்லாமிய அனுஷ்டான முறையைப் பின்பற்றி, ஸுன்னத்து எனும் திருநபிப் பான்மையில் சர்வசாதாரணமாய் எல்லோருடனும் சேர்ந்து ஜமாஅத்தைப் பின்பற்றி பொதுவான முறையாய்த் தொழுகையை நிறைவேற்றமாட்டானோ அவன் உண்மையான முஸ்லிமாய் கருதப்பட மாட்டான்.

"தொழுகை யென்பது அஞ்ஞானிகளுக்குத்தான், மெஞ்ஞானிகளுக்கல்ல" என்று குர்ஆனிலோ, ஹதீதிலோ எங்கும் கூறப்பட்டில்லை. தொழுகையானது ஆலிமாயினும், ஜாஹிலாயினும், அரசனாயினும், அடிமையாயினும், கூலிக்காரனாயினும், முதலாளியாயினும் எல்லோர் மீதும் வேத விதியாக்கப் பட்டதாகும். எந்த மஷாயிகும், எந்த முரீதும் தொழுகையின் கடமையை விட்டு தப்பித்துக் கொள்ள முடியாது.

இதுமட்டுமல்ல; நடக்க முடியாதவர் மீதும், உட்கார முடியாதவர் மீதும் தொழுகை கடமையானதாகவே இருக்கிறது. நோயாளி படுத்த படுக்கையில் கை அசைத்தாவது, தலையசைத்தாவது, கண் அசைத்தாவது தொழுகையை நிறைவேற்றியே ஆக வேண்டு மென்று விதி இருக்கும் போது, இந்த 'மஷாயிக்' வாலாக்கள் எப்படி தப்பித்துக் கொள்ள முடியும்.

எனவே, உலக மதங்களின் பல வகை வணக்கங்களில் மிகச் சிறந்ததும் தத்துவம் மிகுந்ததுமான 'ஸலாத்' என்னும் தொழுகையை, நம் முஸ்லிம்கள் எக்காரணத்தை முன்னிட்டும் நழுவ விடாமல் நிறைவேற்றி, இகபர நலம் பெற்றுய்வார்களாக.

(திருக்குர்ஆன்: "நிச்சயமாக நபிமார்களுடைய கிஸ்ஸாக் களில் அறிவுடையோர்களுக்கு விவேகமும், படிப்பினையும் உண்டா யிருக்கின்றன")

# பெரிய கஸஸுல் அன்பியா.

## மூன்று பாகங்கள் சேர்ந்தது.

முதல் பாகத்தில் துவக்கம் படைத்ததினுடைய கிஸ்ஸா, ஆதம் அலைஹிஸ்ஸலாம் கிஸ்ஸா, ஷீது அலைஹிஸ்ஸலாம் கிஸ்ஸா, இத்ரீஸ் அலைஹிஸ்ஸலாம் கிஸ்ஸா, ஹாறூத் மாறூத் மலக்குகளுடைய கிஸ்ஸாக்கள், நூஹு அலைஹிஸ்ஸலாம் கிஸ்ஸா, ஹூது அலைஹிஸ்ஸலாம் கிஸ்ஸா, ஷத்தாது கட்டிய சுவர்க்கத்தின் கிஸ்ஸா, ஸாலிஹு அலைஹிஸ்ஸலாம் கிஸ்ஸா, இப்ருஹீம் அலைஹிஸ்ஸலாமுடைய கிஸ்ஸா, இஸ்மாயீல் இஸ்ஹாக் அலைஹிஸ்ஸலாமுடைய கிஸ்ஸாக்கள், யஃகூப் அலைஹிஸ்ஸலாம் கிஸ்ஸா, யூஸுப் அலைஹிஸ்ஸலாமுடைய கிஸ்ஸா ஆகியவைகள் அடங்கி இருக்கின்றன.

இரண்டாம் பாகத்தில் ஐயூபு அலைஹிஸ்ஸலாமுடைய கிஸ்ஸா, துல்கிப்லி அலைஹிஸ்ஸலாமுடைய கிஸ்ஸா, ஷுஐபு அலைஹிஸ்ஸலாமுடைய கிஸ்ஸா, மூஸா அலைஹிஸ்ஸலா முடைய கிஸ்ஸா, கிலுறு, யூஸஹ் அலைஹிஸ்ஸலாமுடைய கிஸ்ஸாக்கள், இல்யாஸ் அலைஹிஸ்ஸலாமுடைய கிஸ்ஸா, அல் எஷஹ், அஷ்மவீல் அலைஹிஸ்ஸலாமுடைய கிஸ்ஸாக்கள், தாவூது அலைஹிஸ்ஸலாமுடைய கிஸ்ஸா, ஸுலைமான் அலை ஹிஸ்ஸலாமுடைய கிஸ்ஸா, யூனுஸ் அலைஹிஸ்ஸலாமுடைய கிஸ்ஸா, ஆகியவைகள் அடங்கி யிருக்கின்றன.

மூன்றும் பாகத்தில் ஈஸா அலைஹிஸ்ஸலாமுடைய கிஸ்ஸா ஸக்கரியா, எஹ்யா, மரியம் அலைஹிஸ்ஸலாமுடைய கிஸ்ஸாக்கள் அடங்கி யிருக்கின்றன.

மேலே கூறிய ஒவ்வொரு கிஸ்ஸாவிலும் அநேக சிறு கிஸ்ஸாக்கள் அடங்கி யிருக்கின்றன.

இந்த புஸ்தகம் 10 அங்குல நீளம், 7 அங்குல அகல முள்ள இந்த பெரிய அளவில் 648 பக்கங்களைக் கொண்டது, கலிகோ பைண்டு செய்யப்பட்டது. விலை ரூ. 9—8—0

ஷை அரபுத் தமிழில் முதற் பாகம் விலை ரூ. 6—0—0

கிடைக்குமிடம்:—

ஹாஜி M. A. ஷாஹுல் ஹமீது & ஸன்ஸ்
நெ. 20, ஹைரோட், திருவல்லிக்கேணி, மதராஸ் 5.

# தென் இந்திய முஸ்லிம் கல்விக் கழகம்.

## மகத்தான பொன் விழா

### சரித்திர முக்கியத்துவம் வாய்ந்த ரஸமான நிகழ்ச்சிகள்.

1902-ம் ஆண்டில் தோன்றிய தென் இந்திய முஸ்லிம் கல்விக் கழகத்தின் பொன் விழா இவ்வாண்டு பிப்ரவரி மீ' 5 தேதி முதல் 8 தேதி வரை நடக்கப் போவதாகச் சங்கத்தின் பொதுச் செயலாளர் ஜனுப் M. S. A. மஜீத் ஸாஹிபு B. A., அறிக்கை வெளியிட்டுள்ளார். பொது ஜனங்கள் மேற்படி சங்கத்தின் சேவையை நன்கு அறிந்து கொள்ள நாங்கள் சங்கத்தின் ஐம்பது ஆண்டு சேவையையும், நடக்க இருக்கும் விழா நிகழ்ச்சி குறிப்பையும் நாங்கள் இங்கு தருகின்ரேம்.

கல்விக் கழகங்கள் அறிவு ஒளி பரப்பும் அறநெறி நிலையங்கள். அறவாழ்வோடு இணைந்து நிற்கும் மனிதனின் அன்ருட வாழ்விற்கும் இன்றையக் கல்வி இன்றியமையாததாகி விட்டது.

இக்கல்வியை நம் சமூகத்திடையே பரப்பி, இஸ்லாமிய இளம் செல்வங்களை அறிஞர்களாக, கலைஞர்களாக, நிபுணர்களாக, விஞ்ஞான வித்தகர்களாக உயர்த்தத்தான் கடந்த ஐம்பது ஆண்டுகளாக, "கண் துஞ்சாது, கருமமே கண்ணுகப்" பாடுபட்டு வருகிறது, "**தென் இந்திய முஸ்லிம் கல்விக் கழகம்.**" தென் இந்தியாவில் முஸ்லிம் கல்வி வளர்ச்சியின் சிறந்த சின்னமாக நின்று நிலவுகிறது நம் கழகம்.

## தோற்றம்

ஏறக்குறைய 50 ஆண்டுகளுக்கு முன்வர் மதருஸில் அகில இந்திய முஸ்லிம் கல்வி மாநாடு ஒன்று நடைபெற்றது. அந்த மாநாட்டில் நிறை வேற்றப்பட்ட ஒரு தீர்மானத்திற் கிணங்க நிறுவப்பட்டது தான் '**தென் இந்திய முஸ்லிம் கல்விக் கழகம்**". அரை நூற்ருண்டாக தென் ஞட்டில் முஸ்லிம்களுக்கு அது ஆற்றி வரும் அரிய பணியை மத்திய அரசாங்கமும் இராஜ்ஜிய அரசாங்கமும் அங்கீகரித்துப் பாராட்டும் அளவுக்கு கழகத்தின் சேவை விரிந்து பயன் தந்துள்ளது. அன்றி, சென்னை, அண்ணுமலை போன்ற பல்கலைக் கழகங்களும் கழகத்தின் சேவையை அங்கீகரித்துப் பாராட்டும் வகையில் தம் ஸெனட் சபை

களுக்கு ஒவ்வொரு பிரதிநிதியை தேர்ந்தனுப்பும் உரிமையை கழகத்திற்கு அளித்துள்ளன.

## கழகத்தின் பயனுறு பணிகள்

(அ) தென்னாட்டு முஸ்லிம் மாணவ மாணவிகளுக்கு—சிறப்பாக பொறியியற்கலை (இன்சினீயரிங்) மருத்துவக்கலை (டாக்டர்) இதர தொழிற்கலைகள் பயிலும் மாணவ மாணவிகளுக்கு—மாதா மாதம் உபகாரச் சம்பளம் கொடுத்துதவுகிறது நம் கழகம்.

இவ்வழியில் இக்கழகம், இது வரை $5\frac{1}{2}$ இலட்சம் ரூபாய் வரை உபகாரச் சம்பளமாக உதவியுள்ளது. இத்தொகையில், படிப்பு முடிந்து வேலையில் அமர்ந்துள்ள மாணவர்களால் சிறிது சிறிதாக ஆண்டு தோறும் ரூ. 12,000 முதல் ரூ. 15,000 வரை திருப்பிக் கொடுக்கப்பட்டு வருகிறது. இவ்வாறு உபகாரச் சம்பளம் பெற்றுப் படித்து முன்னுக்கு வருபவர்கள் சமுதாயத்தின் தூண்களாக விளங்குகிறார்கள் என்பது குறிப்பிடத்தக்கது.

(ஆ) பல்லாயிரக்கணக்கான முஸ்லிம்கள் வாழும் நம் இராஜ்ஜியத் தலை நகராம் மதறாஸிலே, தென்னாட்டின் பல பாகங்களி லிருந்து படிப்பிற்காக மாணவர்கள் திரளாக வரும் சென்னை நகரிலே முஸ்லிம்களுக்கென ஒரு கல்லூரி இல்லா திருந்தது பெருங்குறையாக இருந்தது. அக்குறையை நல்ல முறையில் தீர்த்து அழகிய ஒரு கல்லூரியைத் தோற்றுவித்த பெருமை நம் கழகத்திற்கே உரியது. "நியூ காலேஜ்" (The New College) என்னும் இக் கல்லூரி, கனம் சக்ரவர்த்தி இராஜகோபாலாச்சாரி அவர்களால் சிறப்பாகத் தொடங்கி வைக்கப் பட்டது. முஸ்லிம் பெருங்குடி மக்களால் தோற்றுவிக்கப்பட்டுள்ள இக்கல்லூரியில் சாதி சமய வேறுபாடின்றி நானூறுக்கு மேற்பட்ட மானவர்கள் கல்வி பயில்கின்றனர்.

(இ) மதறாஸ் பட்டணத்தில், மத்திய பாகமாக விளங்கும் இராயப் பேட்டையில் இக்கல்லூரிக்கும், கல்விக் கழகத்தின் பணிமனைக்குமாக ஆறு இலட்ச ரூபாய் செலவில் "அஸோஸியேஷன் கார்டன்ஸ்" என்ற பெயரில் பரந்த நிலப்பரப்புடன் பெரிய கட்டடம் ஒன்று வாங்கப்பட்டுள்ளது. புதிதாக வாங்கப்பட்டுள்ள இடத்திற்கு மாற்றப்படுவதற்கு முன்னர் கல்விக் கழகம் இருந்த "போடாம் ஹாஸ்டலை" கழகம் கல்லூரிக்கே நன்கொடையாக அளித்து விட்டது. இதன் மூலம் வாடகையாக மாதா மாதம் ரூ. 800/- கல்லூரிக்குக் கிடைத்து வருகிறது.

## செல்வ நிலை

நமது முஸ்லிம் சமூகத்தின் கல்விக் கப்பலுக்கோர் கலங்கரை விளக்கமாக அரிய தொண்டாற்றிவரும் தென் இந்திய முஸ்லிம் கல்விக் கழகத்தின் செல்வ நிலை செழிப்புள்ளதாக இல்லை. நிரந்தரமான வருவாய்க்குரிய வசதிகளை நம் கழகம் பெறவில்லை. ஆண்டு தோறும் கழகச் செயற்குழு உறுப்பினர்களின் உற்சாக மிகுந்த முயற்சிகளால் கொடை உள்ளம் படைத்த பெருமக்களிட மிருந்து, ரமலான் மாதத்திலும், மற்றும் பல சந்தர்ப்பங்களிலும் நன்கொடைகள், சந்தா முதலியவை மூலமாகத் திரட்டப் பெறும் நிதி தான் நம் கழகத்தின் பொருளாதாரத் தேவைக்கு உதவி வருகிறது.

---

**தென்னிந்திய முஸ்லிம் கல்விச் சங்கத்தின் பொன் விழா (50-வது ஆண்டு விழா) வை தகுதியான முறையில் நடத்துவதற்காகப் பொன் விழா திட்டக் குழு, ஒரு நான்கு நாள் நிகழ்ச்சியை நிர்ணயித்துள்ளது. இந்த நிகழ்ச்சிகள் 1955-ம் ஆண்டு பிப்ரவரி மீ 5 உ முதல் 8 உ வரை நடைபெறும்.**

### முதல் நாள்

5-2-1955 சனிக்கிழமை காலை 10 மணி முதல் 1-30 மணி வரை பொன் விழாக் கொண்டாட்டத்தின் ஆரம்ப விழா நடைபெறும். ஆரம்ப விழாச் சொற் பொழிவை ஒரு முக்கியஸ்தர் நிகழ்த்துவார்.

அன்று மாலை 2-30 மணி முதல் 5-30 மணி வரை அகில இந்திய முஸ்லிம் கல்வி மாநாடு நடைபெறும். அலிகர் முஸ்லிம் பல்கலைக் கழகத் துணை வேந்தர் டாக்டர் ஸாகிர் ஹுஸைன் கான் ஸாஹிப் மாநாட்டிற்குத் தலைமை தாங்குவார். மாலை 6-15 மணி முதல் 8-15 மணி வரை மாநாட்டு விஷய ஆலோசனைக் குழு கூடும். அன்றிரவு 8-30 மணிக்கு பொன் விழா விருந்து நடை பெறும். 10-30 மணி முதல் பிரசித்திப் பெற்ற ஹிந்துஸ்தானி பாடகர் அஸீம் பிரேம் ராகி (கவ்வாலி) இசைக் கச்சேரி நடத்துவார்.

### இரண்டாம் நாள்

6-2-1955 ஞாயிற்றுக் கிழமைகாலை 10 மணி முதல் 1-30 வரை அகில இந்திய முஸ்லிம் கல்வி மாநாடு

தொடர்ந்து நடைபெறும். மாநாட்டில் கொண்டு வரப்படும் தீர்மானங்கள் மீது சொற்பொழிவுகள் நிகழும். அன்று மாலை 2-30 மணி முதல் 5-30 மணி வரை பந்தய விளையாட்டுகள் நடைபெறும். அதில் சங்க அங்கத்தினர்களும், அவர்களின் குழந்தைகளும், பொது மக்களும் பங்கு கொள்வார்கள்.

இரவு 9-30 மணியிலிருந்து அகில இந்திய உர்தூ கவியரங்கு (முஷாயிரா) நடை பெறும். அதில் இந்தியாவின் பிரபல உர்தூ கவிஞர்களான மௌலானாக்கள் அன்வர் ஸாபிரி, கைய்ர் போரவி, ஸைர்-யே-ஹரம், ஸாகிர் நிஜாமி, அர்ஷ் மன்ஸியானி, ஆரிப் அப்பாஸி, தில் லக்னவி, நுஷுர் வாஹிதி கான்பூரி, நூஹ் நாரவி முதலியோர் கலந்து கொள்வார்கள்.

## மூன்றும் நாள்

7-2-1955 திங்கள் கிழமை காலை 10 மணி முதல் 1-30 மணி வரை அகில இந்திய உர்தூ மாநாடு நடைபெறும். அன்ஜுமனே தாக்கியே உர்தூ (அலிகர்) தலைவரான காஸி கே. எம். அப்துல் கப்பார் ஸாஹிப் தலைமை தாங்குவார்.

அன்று மாலை 2 மணி முதல் 7-30 மணி வரை பெண்களின் விளையாட்டுப் போட்டியும் கூட்டமும் நடைபெறும். இதில் பெண்கள் மாத்திரமே பங்கு கொள்வார்கள்.

அன்று மாலை தமிழ் முஸ்லிம் "கவிஞர் தினம்" கொண்டாடப்படும். கொழும்பு ஸஹிரா கல்லூரி பிரின்ஸிபால் ஜனாப் அப்துல் அஸீஸ் C. C. S. தினத்திற்கு தலைமை தாங்குவார்.

## நான்காம் நாள்

இஸ்லாமிய உலகின் சரித்திரப் புகழ் பெற்ற, கவிஞரும், தத்துவ ஞானியும் சரித்திராசிரியரும் பௌதீக ஸாஸ்திரியுமான ஷேக் அபூ அலீஸீனு அவர்களின் ஆயிரமாண்டு விழா 8-2-'55 காலை 10 மணி முதல் 1-30 மணி வரை நடைபெறும். இந்தியாவிலிருக்கும் ஈரான் தேசத்துத் தூதுவராலய, கலை ஆலோசகர் டாக்டர் எம். ஹெச். எம். பரீதானீ இவ்விழாவிற்குத் தலைமை தாங்க இசைந்துள்ளார்.

அன்று மாலை சங்கீத சிகாமணி உஸ்தாத் படே குலாம் அலி அவர்களின் சங்கீதகச்சேரி நடைபெறும்.

## வரவேற்புக் குழு

நடை பெறவிருக்கும் எல்லா நிகழ்ச்சிகளுக்கும் பொதுவாக ஒரு வரவேற்புக் கமிட்டியை ஏற்பாடு செய்ய பொன் விழா (திட்டக்) குழுவினர் முடிவு செய்துள்ளார்கள். இந்தக்குழுவில் உறுப்பினராக விரும்புவோர் ரூ. 25 கட்டணம் கட்டி வரவேற்புக் கமிட்டி டிக்கட்டுகளைப் பெற்றுக் கொள்ளவேண்டும். ஏற்பாடு செய்திருக்கும் நிகழ்ச்சிகளில் பிரவேசக் கட்டணம் உள்ள நிகழ்ச்சிகளும் உண்டு. ஆனால் பொன் விழா நன்கொடையாளர்களும் வரவேற்புக் கமிட்டி அங்கத்தினர்களும், நடைபெற விருக்கும் எல்லா நிகழ்ச்சிகளிலும் யாதொரு கட்டணமு மின்றி பங்கு கொள்ளலாம். அவர்களுக்குப் பிரத்தியேக இருப்பிடங்களும் அமைக்கப்படும்.

பொன் விழா நிகழ்ச்சிகளுக்காக விசேஷ அலங்காரப் பந்தல் (ஷாமியானா) நிர்ணயிக்கப்பட்டுள்ளது. இடவசதி, ஒரு குறிப்பிட்ட அளவிலே தான் இருப்பதினால், விழாவின் வரவேற்புக் குழு டிக்கட்டுகளை சீக்கிரமே வாங்கிக் கொள்வது நலமாகும். வரவேற்புக் கமிட்டி அங்கத்தினர்களுக்கு பிரத்யேக இடவசதியுண்டு. கோஷா பெண்களுக்கு தனி இடவசதியுண்டு.

வாழ்க்கையில் ஒரு தடவைதான் இத்தகைய உயரிய நிகழ்ச்சிகளை ஏற்பாடு செய்ய முடிகிறது. ஆகவே தென்னிந்திய முஸ்லிம் உலகில் நிகழவிருக்கும் சரித்திர முக்கியத்துவம் வாய்ந்த இந்த விசேஷ விழாவில் யாவரும் நிச்சயம் பங்கு கொள்வீர்களென்று நம்புகிறோம்.

முக்கிய குறிப்பு :—விழா வரவேற்புக் குழு டிக்கட்டுகளை சங்க ஆபீஸில் பணம் செலுத்திப் பெற்றுக் கொள்ளலாம். வெளியூரிலுள்ளோர் மணியாடர் மூலம் பணம் அனுப்பி டிக்கட்டைப் பெறலாம்.

# தாஃவீஸ் ஹமீதிய்யா

## இதில் 8 தாஃவீஸ்கள் அடங்கி யிருக்கின்றன.

அவைகள் :— (1) பாக்கத்துண்டாக தாஃவீஸ், (2) குழந்தை பெறுவதற்கு தாஃவீஸ், (3) குழந்தை அழுகாமல் இருக்க தாஃவீஸ், (4) முஹப்பத்துக்கும் ரிஸ்கு விஸ்தீரணத்துக்கும் தாஃவீஸ், (5) பாடமுண்டாவதற்கு தாஃவீஸ், (6) ஜின், ஷைத்தான்களை விட்டு விலக தாஃவீஸ், (7) தொத்து நோய்களுக்கு தாஃவீஸ், (8) சூனியம், பொறாமை, கண் திருஷ்டி முதலியவைகளுக்கு தாஃவீஸ். ஒரே காகிதத்தில் ஷை 8 தாஃவீஸ்களையும் தனித்தனியே பிரிக்கும் படியாக அச்சிட்டு இருக்கிறது.

ஒவ்வொரு தாவீஸிலும் அந்தந்த தாஃவீஸை எப்படி உபயோகிப்பது என்னும் விபரங்களும் கொடுக்கப் பட்டிருக்கிறது.

| | | |
|---|---|---|
| 8 தாஃவீஸ்கள் சேர்ந்த 1 ஷீட்டுக்கு ரூ. | | 0—4—0 |
| ஷை 25 ஷீட்டுகள் ரூ. | | 3—0—0 |
| தாஃவீஸ் கஞ்சுல் அர்ஷ் மெல்லிய தாளில் அச்சிடப் பட்டது. | 1-க்கு ரூ. | 0—1—0 |
| | ஷை 100-க்கு ரூ. | 1—8—0 |
| ஷை தாஃவீஸ் 4 கலர்களில் அச்சிடப் பட்டது. வீடுகளில் பிரேம் போட்டு வைக்க லாயக்கானது. | 1-க்கு ரூ. | 0—2—0 |
| | 100-க்கு ரூ. | 4—8—0 |
| கல்வத்து ஆண்டவர்களின் தரீகத்து இலாஹிய்யாவின் விர்துகள் பத்தையும் தனியாக போட்டோ அச்சில் செய்யப்பட்டது. | ஷீட் 1-க்கு ரூ. | 0—2—0 |
| | 100-க்கு ரூ. | 8—0—0 |
| தாஃவீஸ், பீங்கான் தட்டுகளில் எழுதும் கருப்பு மை பொட்டலம் பெரியது 1-க்கு | அணா. | 3 |
| சிறியது 1-க்கு | அணா. | 1 |
| சுர்மா நூராணி பொட்டலம் 1-க்கு | அணா. | 2 |
| குர்ஆன் ஆயத்து படங்கள், மக்கா, மதீனா படம் முதலியவை டஜன் | விலை ரூ. | 3—0—0 |

கிடைக்குமிடம்:—
ஹாஜி எம். எ. ஷாஹுல் ஹமீது அண்டு ஸன்ஸ்
நெ. 20, ஹைரோட், திருவல்லிக்கேணி, மதராஸ் 5.

# சர்வாதிகாரத்திற்குப் பலியான தியாகி ஸலீம்.

"மௌலவி K. H. அப்துல் கரீம் (நூரிய்யி) பேரையூர்"

கி- பி- 695ல் அப்துல் மலிகிப்னு மர்வான், ஹஜ்ஜா ஜிப்னு யூசுபை,அவரது திறமையையும், வீரத்தையும் நன்குணர்ந்து இராக்கின் கவர்னராக நியமித்தார்.

ஹஜ்ஜாஜிற்கு உயரிய கவர்னர் பதவி கிடைத்தவுடனேயே மண்டைக்கர்வமும், மமதையும் மிதமிஞ்சிவிட்டது. பாஸிஸம் அவரது தொழிலாகவும், நாஜிஸம் அவரது நடத்தையாகவும் தான்தோன்றித்தனம் தற்பெருமை, முதலிய துற்குணங்கள் அவரது அணிகலன்களாக மாறிவிட்டன. தனது சர்வாதிகாரப் பைசாசத்தைப் பிரயோகித்து பிரஜைகளின் சிறிய சிறிய குற்றங்களுக்கெல்லாம் கொடிய பெரிய தண்டனைகளைக் கொடுத்து சித்திரவதை செய்ய முற்பட்டு விட்டார். அவரது அநீத ஆட்சிக்கும், பாஸிஸ பைஸாஸத்திற்கும், நாஜிஸ நெருப்பிற்கும், சர்வாதிகார ஷாத்தானுக்கும் பலியானவர்கள் பலர். ஆதலின், பலியான புனித ஆத்மாக்களிலே பக்தி நிறைந்த (ஆலிப்) அறிஞர்குழுவே மிக மிக அதிகம். சுருங்கக்கூறுமிடத்து அவரது ஆட்சி எந்த முறையிலே அமைந்திருந்ததேயானால், மறைவன் வகுத்த சட்டம் மீறப்பட்டு, நானில நல்வழிகாட்டி நபிகள் (ஸல்) அவர்கள் நாடாத்தி காட்டிய நல்லாட்சி ஒழிக்கப்பட்டு, மூர்க்கமே மார்க்கம், தான் வைத்ததே சட்டம், கொடுங்கோண்மையே தனது லட்சியம் என்ற முறையிலேயே அவரது அநீத ஆட்சி அமைந்திருந்தது.

ஹஜ்ஜாஜின் பாஸிஸ அணுக்குண்டிற்கு பலியானவர்களிலே சத்தியப்பண்பும், தியாக உணர்ச்சியும் ஆத்மீகத் தன்மையும் நிறைந்த தியாகி ஸலீமுப்னு ஹாரிது என்பவரும் ஒருவர்.

கி. பி. 696,ல் ஹஜ்ஜாஜ் ஸலீமை தனது ஆட்சி மன்றத்திற்கு அழைத்து தனது ஆட்சியில் (காளி) உயரிய மார்க்க நீதிபதி பதவியை எற்று நடத்துமாறு ஆக்ஞையிட்டான். அதற்கு ஸலீமவர்கள், "எந்த ஆட்சியில் அல்லாஹ¬வின் அழகிய சட்டங்கள் அலட்சியம் செய்யப்பட்டு, அண்ணல் நபி (ஸல்) அவர்களின் உயரிய ஆட்சிமுறை உதாசீனம் செய்யப்பட்டு, அநீதம், அடக்குமுறை, சர்வாதிகாரம் முதலிய கொடிய ஆயுதங்களைக் கொண்டு ஆட்சி செய்யப்படுகிறதோ அவ்வித அநீத ஆட்சிக்கு உதவியாக நான் நீதிபதி பதவிவகித்து உதவியாள

ளுய் திகழ இயலாது, எனவே என்னை தனித்திருந்து தக்கோனின் வணக்கத்தில் ஈடுபடவிட்டு விடுங்கள்'' என மிகபண்புடன் வேண்டினுர்.

ஹஜ்ஜாஜ்:—ஸலீமே! தாங்கள் எவ்வித ஆட்சியை விரும்புகிறீர்கள் ?

ஸலீம்:—அகில மக்கட்கு அத்வைத கொள்கையும், அறநெறி வழுவா அழகிய அரசியல் பாதையையும், நடத்திக்காட்டி பிற்கால மக்களுக்கோர் முன்மாதிரியாய் சென்றுள்ள அண்ணல் நபிகள் திலகம் (ஸல்) அவர்களின் ஆட்சிபோன்றுள்ள அறமே உருவாயமைந்த அழகிய ஆட்சி தேவை. மேற்கூறிய நற்குணங்கள் ஒருங்கே நிறைந்துள்ள நல்லாட்சியில் நான் (காஸீ) நீதிபதி பதவி வகிக்க ஆசிக்கிறேன்.

ஹஜ்ஜாஜ் :— ஸலீம்! நீர் கூறக்கூடிய முறையிலே எனது நல்லாட்சி நடைபெற வில்லையா ?

ஸலீம் :— (மிக உறத்த தொனியிலே) ஹஜ்ஜாஜே! ஒரு பொழுதும் உன்னுட்சி உண்மையான இஸ்லாமிய ஆட்சியாக இல்லவே இல்லை. அழகிய இஸ்லாமியம் உனதாட்சியில் குடி கொண்டிருந்தால் உன்னிடம் பிர்அவ்னிஸம், நாஜிஸம் தாண்டவ மாடாது, பூவுலகெங்கும் உனது நீதியாட்சி புகழப்படும். ஆனுல் நேர்மாற்றமாக உனது அநீத ஆட்சியும், சர்வாதிகாரப் போக்கும், பாஸிஸ வெறியும்தான் பாரில் பிரபல்யம் அடைகிறது.

ஹஜ்ஜாஜ் :— ஸலீம்! என்ன வாய்க்கு வந்தபடி யெல்லாம் வைத்துத் தீட்டுகிறுய். இது யாருடைய ஆட்சி? இவ்விதம் இவ்வரச குழு மன்றத்தில் வீணே உளறக்கூடியவரின் கதி என்னவாகும் என்பதை யெல்லாம் ஞாபகத்திலிருத்தி வார்த்தையாடு. கண் தெரியாமல் கண்டபடி கர்ஜிக்காதே.

ஸலீம் :— ஹஜ்ஜாஜ்! ஆம், நான் நன்கு அறிவேன். என் போன்ற பஞ்சைகள் சித்தரவதை செய்யப்படுவார்கள், கொலை செய்யப்படுவார்கள், அப்புனித தியாகிகளின் வழி செல்வதிலே நானும் ஒருவன் என்பதை நன்கு அறிவேன்.

ஹஜ்ஜாஜ் :— 'ஸலீம்! என்ன திரும்பத் திரும்ப வீணே உளரிக் கொண்டிருக்கிறுய். ஜாக்கிரதை! வாய்க்கு வந்தபடி உளருதே, பேச்சை நிறுத்தும்' என மிக வெகுளி ததும்ப கூறினுன் ஹஜ்ஜாஜ்.

ஸலீம் :— ஹஜ்ஜாஜ்! நான் கூறியவைகளெல்லாம் வெரும் உளரல்கள் தான், உன் அறிவுக்கு. ஆனுல், அந்த உளரல்களிலே பல உயரிய உண்மைப் பண்புகள் மறைந்திருக்கின்றன, அதை நீ உணரவில்லை, சிந்தனு சக்தி கொண்டு சிந்திக்கும் சிந்தனையாளர்கட்கு சிறந்த

படிப்பினைகள் பதிந்திருக்கிறது, ஆனால் அதை நீ சிந்திக்க வில்லை. பக்திப் பண்போடு நோக்கும் பக்தர்கட்கு பல மெய் வழிகள் ஒலிந் திருக்கின்றன, ஆனால் அதை நீர் பார்க்கவில்லை. ஆட்சியை அழகுறச் செய்யக் கூடிய அறிஞர்கட்கு பல அரிய அரசியல் பொக்கிஷங்கள் நிறைந்திருக்கின்றன, ஆனால் அதை நீர் அறியவில்லை. சன்மார்க்கக் கண் கொண்டு பார்க்கும் சத்திய சிலர்கட்கு பல சத்திய வழிகள் இலங்கிக் கொண்டிருக்கின்றன, ஆனால் அதை நீ உணரவில்லை. ஆம்! ஆம்!! நிட்சயம் நீர் அவைகளை உணர முடியாது. ஏனெனில், நீர் சர்வாதி காரத்தை உனது சட்டையாகவும், பாஸிஸத்தை உனது பண்பாகவும், ஆணவத்தை உனது அணிகலனாகவும், துற்செயல்களை உனது துணைவனாகவும், இன்னல் கொடுப்பதை உனது இயற்கையாகவும் அமைத்துக் கொண்டிருக்கிறாய், எனக் கூறி முடித்தார் அஞ்சா வீரர் ஸலீம்.

**ஹஜ்ஜாஜ் :—** ஸலீம்! அன்போடு நான் வளங்கும் (காலீ) நீதிபதி பதவியை ஏற்றுக் கொள்கிறாயா? அல்லது உனது உயிரை வீணே போக்கடிக்கப் பிரியப்படுகிறாயா?

**ஸலீம் :—** ஹஜ்ஜாஜ்! ஊதாரித்தனம் நிறைந்த உனது ஆட்சியில் உயர்ந்த நீதிபதி பதவியை வகிப்பதைவிட இந்த உயிர் பலியாகி விடு வதையே நான் மிக மிக விரும்புகிறேன். ஹஜ்ஜாஜ்! நீர் நாடியதைச் செய்யும், நான் அதற்கு சித்தமா யிருக்கிறேன்.

ஹஜ்ஜாஜ் கொலையாட்களைக் கூப்பிட்டு கொலையாளர்களே! நமது நல்லாட்சிக்கு மீறிய இந்த நயவஞ்சகனை உங்களது வாளிற்கு இறை யாக்குங்கள், என கட்டளை பிறப்பித்தான்.

கொலையாட்கள் ஸலீமை கொலை களத்திற்கு அழைத்துச் சென்று தங்களது கூரிய வாளிற்கு இறையாக்கி விட்டார்கள். புனித தியாகி ஸலீமும் இவ்வுலகை விட்டு இறைவனடி சேர்ந்து விட்டார்கள்.

(இன்னு லில்லாஹி வஇன்னு இலைஹி ராஜிஊன்)

அன்பர்களே! ஸலீமின் தியாக உணர்ச்சியும், மார்க்கப் பண்பும் எவ்வளவு உயர்ந்த அந்தஸ்தில் இருந்தது என்பதை சிந்தித்துப் பாருங்கள். இச்சிறிய சரித்திர நிகழ்ச்சி இன்று படர்ந்துள்ள சர்வாதி காரத்தையும், பாஸிஸத்தையும் எதிர்த்து புனித போர் தொடுக்கும் தியாக மூர்த்திகட்கு சிறந்த படிப்பினையும், முன்மாதிரியுமாகும் என் பதில் கிஞ்சிற்றும் ஐயமில்லை. ஆதலின், அல்லாஹ் நம்மனைவர்களையும் நன்மார்க்கத் தியாகிகளின் நல்வழியில் நடாத்திச் செல்வானாக. ஆமீன்.

# இரத்தச் சின்னம்

## (தொடர் கதை 10—வது பகுதி)

### 19-வது அத்தியாயம்.

மாரீஸின் திவாலா (இன்சால் வன்ஸி) விஷயம் ஒழுங்காகமுடிய ஒரு வாரம் பிடித்தது.

குலோரியா, பாங்கை விட்டு வெளியே வருகிறாள், வேறு எங்கு என்ன வேலை செய்வது என்னும் எண்ணத்தில். இன்ஸ்பெக்டர் பென்டன் அவளை பாங்கில் சந்தித்து, "நீ ஹட்டன் வீட்டை விட்டு வெளி வருவதையும் உனக்குப் பின் ஹட்டன் கதவை மூடியதையும் நான் பார்த்திராவிட்டால் நீ இக்கொலையில் கட்டாயம் மாட்டி யிருப் பாய்" என்றார்.

அவள் அதற்கு பதில் யாதும் சொல்லாமல், தலையை யசைத்த வாறு பாங்கை விட்டு வெளிச் சென்றாள்.

"இவளைப் பற்றி உங்கள் அபிப்பிராயம் என்ன?" என்று பக்கத்தி லுள்ள ஸிம்ஸனைக் கேட்டார்.

"இவளை அறிய முடியவில்லை. இவளுக்கு இரத்தச் சின்ன சங்கம் பற்றி தெரியலா மென்று நினைக்கிறேன். அதனால் இவளை நானே வேலைக்கு வைத்துக் கொள்ளலா மென்று ஒரு எண்ணம்" என்றார் ஸிம்ஸன். பென்டன் அதற்கு பதில் சொல்லாமல் ஏதோ யோசனையி லிருக்கவே "நீ என்னை பைத்தியக்கார னென்று நினைக்க லாம். அவளை எனது ஆபீஸில் வைத்தால், அங்கோ திருடுவதற்கு ஒன்றும் கிடைக்காது. அவள் இரத்தச் சின்ன சங்கத்துடன் தொடர்பு வைத்திருந்தால் அப்பொழுது என்னால் அறியக்கூடும். அவளைப் பார்ப்பதற்கே மனத்திற்கு ஒரு உற்சாகம் வருகிறது" என்றும் ஸிம்ஸன் சொன்னார்.

"அதனால் தான் அவளுடன் கை குலுக்கினீர்களோ?" என்று பென்டன் கேட்க, ஸிம்ஸன் சிறித்துக் கொண்டே "அவளுக்கு பின்னால் யாரோ நின்று அவளை இத்திருட்டு செயல்கள் யாவையும் செய்யத் தூண்டுகிறார்கள் போல் தோன்றுகிறது" என்றார்.

"அவளுக்கு பின் இரத்த சின்ன சங்கமிருக்கு மென்று நினைக்கிறீர்களா?" என்று பென்டன் கேட்க, "இருக்கலாம்! எதற்கும் அவளை சந்தித்து பேசப் போகிறேன்" என்றார்.

அன்று மாலை குலோரியா தங்கியிருக்குமிடத்திற்கு ஸிம்ஸன் சென்றார். அங்கு குலோரியாவின் வேலைக்காரி அவரை முன் அறையில் உட்காருமாறு சொல்லி, உள்ளே எஜமாட்டியிடம் அறிவிக்க சென்றாள். ஒரு நிமிஷத்தில் சிறித்த முகத்துடன் வந்தாள் குலோரியா.

"வாருங்கள் மிஸ்டர் ஸிம்ஸன்! எனக்கு உபதேசம் சொல்ல வந்தீர்களா? எச்சரிக்கை செய்ய வந்தீர்களா?"

"அப்படி ஒன்றுமில்லை. உனக்கு ஒரு வேலை கொடுக்கலா மென்னும் நோக்கத்துடன் வந்துள்ளேன்"

இதைக் கேட்ட குலோரியாவின் இரு புருவங்கள் சிறிது மேலே சென்றன. "உங்களுக்கு ஒரு செக்ரடரி அல்லது அஸிஸ்டென்ட் தேவை படுகிறதா! கள்ளனைக்கொண்டு கள்ளனைப் பிடி என்று மனதில் தோன்றுகிறதா? அல்லது என்னை நல்வழியில் திருத்த வேண்டு மென்னும் எண்ணமா?" என்று கேட்டுக்கொண்டே அங்கிருந்த பியானோவின் முன்னுள்ள நாற்காலியில் உட்கார்ந்தாள். அவள் தன்னைக் கேலி செய்யும் தோரணையில் கேட்பதாக ஸிம்ஸனுக்கு தோன்றியது.

"குலோரியா! நீ எதற்காக திருடுகிறாய்?"

"திருடுவது என் சுபாவ குணம்."

"அவ்வாறு திருடுவதால் உன் மனதிருப்தி எற்படுகிறதா?"

குலோரியா தன் அறையைச் சுற்றி கையைக் காண்பித்தவாறு "இவ்வளவு அருமையான இடத்தில் வசிக்க வசதி. எனக்கு ஒரு வேலைக்காரி. எனக்கு பஞ்சமில்லை. பட்டினியின் பயமில்லை. இவ்வளவு திருப்தி போதாதா? அதிருக்கட்டும். ஏதோ வேலை என்றீர்களே, என்ன வேலை? எனக்கு போலீஸ் வேலையா?"

"எனக்கு ஒரு நம்பிக்கையுள்ள செக்ரடரி தேவை. எனக்கு தற் போது வேலை அதிகமாகிக் கொண்டிருக்கிறது. எனக்கு வரும் கடிதங் களுக்கு பதில் எழுதவும் நேரமில்லை. ஆனால் எனது ஆபீஸிலோ திருடு வதற்குரிய சாமான் ஒன்றுமில்லை என்று முன்பே சொல்லிவிடுகிறேன். அதனால் உன்னை அவ்வேலைக்கு அமர்த்தலாமென்று அபிப்பிராயம்" என்று சிறித்துக்கொண்டே ஸிம்ஸன் சொன்னார்.

"நீங்கள் தைரியத்துடன் என்னை வேலையில் வைக்க சம்மதிக்கும் போது எனக்கும் அவ்வேலையை செய்ய யாதும் பயமில்லை. உங்களது ஆபீஸ் எங்கிருக்கிறது?"

ஸிம்ஸன் தனது ஆபீஸ் அட்ரஸை கொடுத்தார்

"நாளை காலை 10 மணிக்கு ஆஜராவேன். உங்கள் செக்புக்கை பூட்டிவையுங்கள். அக்கம் பக்கம் சில்லரை காசுகள் யிருந்தாலும்

பத்திரப்படுத்திக் கொள்ளுங்கள்" என்று சிறித்துக்கொண்டே குலோரியாசொன்னாள்.

"இவள் ஒரு நூதனமான பெண்" என்று நினைத்துக் கொண்டே அங்கிருந்து புறப்பட்டார் ஸிம்ஸன். ஸிம்ஸன் எத்தனையோ வித மான திருடர்களையும் அவர்களின் குணங்களையும் அறிந்திருந்தும், இப்பெண்ணின் குணத்தை இவரால் அறிய முடியவில்லை. இதைப்பற்றி யோசித்துக் கொண்டே, இன்ஸ்பெக்டர் பென்டனைப் பற்றி சிந்தித் தார். இரத்த சின்ன சங்கத்தை இந்த மூன்றாவது முறையும் பிடிக்க முடியாததால் பென்டனுக்கு அவமானம் ஏற்படுவதை நினைத்தார். போலீஸ் தலைமை ஆபீஸ் இவ்வாறு பென்டனால் இரத்த சின்ன சங்கத்தை இம்முறையும் பிடிக்கவில்லை யென்றறிந்தபின் பாவம் பென்டனை என்ன செய்வார்களோ என்று எண்ணினார்.

அன்றிரவு பென்டனும் அதைப்பற்றியேதான் யோசித்துக் கொண்டிருந்தார். இவர் ஆபீஸுக்கு போனதும் தனக்கு முன்பே, தலைமை ஆபீஸிலிருந்து ஒரு கடிதம் வந்திருந்தது. அக்கடிதத்தை மிக வருத்தத்துடனும் மனச்சோர்வுடனும் படித்தார். இனி தனக்கு வரப்போகும் கஷ்டங்களைப்பற்றி நினைத்து வருந்தினார்.

மறுநாள் காலையில் கிரீன் வீட்டிற்கு கூப்பிடவே, அங்கு சென்றார். அங்கு இவருக்கு முன்பே ஸிம்ஸன் வந்திருந்தார்.

கிரீன் மிக பிசுனாகயிருந்தும், ஸிம்ஸனின் பீஸ் அதிகமென்று தெரிந்திருந்தும், தனக்கு இரத்தச்சின்ன சங்கம் எச்சரிக்கை கடிதம் கிடைத்ததும், உடனே ஸிம்ஸனை தருவித்தார். கிரீனுக்கு போலீஸின் பேரிலிருந்த நம்பிக்கை போய்விட்டது.

"கட்டாயம் பணம் கட்டித்தான் தீரவேண்டும்" என்று உறக்க கிரீன் சொல்லும்போது, பென்டன் அவ்வீட்டினுள் நுழைந்தார். கிரீனுக்கு பயத்தால் முகம் வெளுத்திருந்தது.

"இதைப்போல் ஜனங்களை பயமுறுத்தி பணம் பிடுங்கும் சங்கத்தை பிடித்து அடக்க முடியாமல் போலீஸ் தத்தளிக்கும் போது நாம் என்ன செய்வது. கேட்கும் தொகையை கொடுக்க வேண்டியது தான். எனது சிநேகிதர் ஜோஸப்புக்கும் இதைப்போல் கடிதம் கிடைத்ததும், பணத்தை கட்டி விட்டார். நானும் அவ்வாறு செய்ய வேண்டியதுதான்" என்று கோபமும் வருத்தமும் கலந்தவாறு சப்த மிட்டுக் கொண்டே அங்குமிங்கும் வேகமாக நடந்து கொண்டிருந்தார்.

"மிஸ்டர் கிரீன் பணம் கொடுக்க வேண்டியதுதான். ஆனால் இம்முறை இரத்தச் சின்ன சங்கம் மிக தைரியமாகவும் துணிச்சலாகவு மிருப்பதாகத் தெரிகிறது" என்றார் ஸிம்ஸன்.

"என்ன? இம்முறை என்ன விசேஷம்?" என்று பென்டன் கேட்டார்.

"அந்த கடிதம் எங்கே?" என்று ஸிம்ஸன் கேட்க, கிரீன் தனது டிராயரை வேகமாக இழுத்து அதனுள்ளிருந்த கடிதத்தை ஸிம்ஸன் முன் கோபமாக எறிந்தார்.

"இது எப்பொழுது வந்தது?" என்று பென்டன் கேட்டுக் கொண்டே அக்கடிதத்தை வாங்கி பார்த்தார்.

"இன்று காலே போஸ்டில் வந்தது" என்று கிரீன் சொன்னர்.

"வெள்ளிக்கிழமை மாலே 3-30 மணிக்கு ஸிம்ஸன் ஆபீஸிற்கு பணத்திற்காக வருவோம். நோட்டுகளின் நம்பர்கள் தொடராக யிருக்கக்கூடாது. பணம் அங்கு அச்சமயத்தில் வராவிடில் அதே இரவு நீ இறப்பாய்" பென்டன் அக்கடிதத்தை மூன்று முறை படித்தார்.

"சரிதான். மிக சுலபமாகி விட்டது. அவர்கள் வருவார்களென்று நான் நினைக்கவில்லை" என்ருர்.

"கட்டாயம் வருவார்களென்று நினைக்கிறேன். ஆனுலும் நானும் அவர்களை வரவேற்க தயாராகத்தானிருப்பேன். நீங்களும் அருகாமையில் யிருப்பது நலம்" என்று ஸிம்ஸன் சொன்னர்.

"நான் கட்டாயம் அங்கு வருகிறேன். ஆனல் அவர்கள் வருவது சந்தேகம் தான்" என்று மறுமுறையும் பென்டன் சொன்னர்.

"நீங்கள் சொல்வது போல் நான் நினைக்கவில்லை. இரத்தச் சின்ன சங்கத்தின் தலைவன் ஆணே பெண்ணே, ஆனல் தைரியத்தில் கொஞ்சமும் குறைந்தவர்களாக தெரியவில்லை. சரி, நீங்கள் எனது ஆபீஸிற்கு வந்தால் அங்கு உங்களின் பழைய சிநேகிதத்தை சந்திக்க நேரிடும்" என்று சிரித்தவாறு ஸிம்ஸன் சொன்னர்.

பென்டன் சிறிது யோசித்து, "யார்? குலோரியாவா?" என்று கேட்டார்.

"ஆம். அவளை வேலைக்கு வைத்துள்ளேன். இந்த இரத்தச் சின்ன சங்க மர்மத்தை கண்டு பிடிக்க அவள் மிக உதவியா யிருப்பாளென்று நினைக்கிறேன்" என்று ஸிம்ஸன் சொல்லும் போது கிரீன் இவர்களின் சமீபம் வரவே, சம்பாஷணை நின்றது.

## 20-வது அத்தியாயம்.

கிரீன் வியாழக்கிழமையன்றே பாங்கிலிருந்து பணம் வாங்கி வைக்க வேண்டு மென்றும் அதை ஸிம்ஸன் வாங்கி தனது அபீஸிற்கு கொண்டு போய் வைக்கவும், பென்டனும் ஸிம்ஸன் ஆபீஸிற்கு முன்பே வந்து வேண்டிய ஏற்பாடு செய்ய வேண்டு மென்றும் தீர்மானித்தனர்.

பென்டன் கிரீன் வீட்டிலிருந்து போலீஸ் ஆபீஸிற்கு செல்லும் போது, டாம் வீட்டை கடக்க வேண்டியதா யிருந்தது.

டாம், தனது தகப்பனுர் இறந்தபின் அதிகமான சொத்துக்கு சொந்தக்காரனுகவே, அவனுடைய பார்வையும் மாறியது. சிறிய பையனைப்போலிருந்தவன், தற்போது பெரிய பொறுப்பை ஏற்ற ஒரு மனிதனுக தென்பட்டான். அவனுக்கு தற்போது அதிக பொறுப்பும் வேலைகளும் ஏற்பட்டும், தனது மனதிலுள்ள குலோரியாவின் உருவம் மறைய வழியில்லை.

தற்போது இன்ஸ்பெக்டர் பென்டனுக்கும் டாமுக்கும் ஒரு விதமான நட்பு ஏற்பட்டிருந்தது. முன்பு ஒரு நேரத்தில் இந்த பென்டனை வெறுத்த டாம், பின்பு யோசித்து போலீஸ் அதிகாரி தனது வேலையை ஒழுங்காக செய்வதில் அநேகருக்கு வருத்த மேற்படலா மென்றும் அவ்வருத்தங்களை பொருட்படுத்தாது, தனது காரியத்தை நடத்துபவனே ஒழுங்கானவனென்றும் மனதில் தோன்றியது.

இன்ஸ்பெக்டர் பென்டன் டாம் வீட்டின்முன் வந்ததும் சிறிது நின்று யோசித்தார். பிறகு மெதுவாக வாயற் படியண்டை வந்து மணி அடித்தார். ஒரு வேலைக்காரன் கதவைத்திறக்க, பென்டன் உள் சென்றுர். அச்சமயம் டாம் காலை நாஷ்டா சாப்பிட்டுக் கொண்டிருந்தான். இவரைப் பார்த்ததும், "வாரும் மிஸ்டர் பென்டன், காலை சாப்பாட்டை நான் மிக பிந்தி சாப்பிடுகிறேன். நீங்களெல்லாம் அதை முடித்து எத்தனையோ மணிகளாகி யிருக்குமென்று நினைக்கிறேன். சரி, ஏதாவது புதிய விஷயம் உண்டா?"

"புதியது ஒன்று மில்லை. ஆனுல் மிஸ்டர் கிரீன் பணம் கொடுப்பதாக ஒத்துக் கொண்டார்"

டாம் இதைக் கேட்டதும் சிறித்துக் கொண்டே "கொடுக்கலாம்; ஆனுல் அதை வாங்குபவன் பாடுதான் கஷ்டம். நான் இரத்தச் சின்ன சங்கத் தலைவனு யிருந்தால் கிரீன் பணத்தை வாங்க இஷ்டப்பட மாட்டேன்"

இன்ஸ்பெக்டர் ஆச்சரியத்துடன் "ஏன்" என்று கேட்டார்.

"கிரீன் தன்னிடமிருந்து ஏதாவது பணம் போய் விட்டால், அதை கடைசி தம்பிடி வரை திருப்பி வாங்காமல் அவர் தூங்க மாட்டாரென்று எனது தகப்பனுர் சொல்லி யிருக்கிறுர். தற்போது பணம் கொடுத்து விட்டாலும் அவர் அந்த இரத்தச் சின்ன சங்கத்தின் பின்னுலேயே போய் எப்படியாவது தனது பணத்தை திருப்பி வாங்காமல் விடமாட்டார்."

"இருக்கலாம். இன்னும் பணம் கொடுக்கவில்லை" என்று சொல்லியதுடன் கிரீனுக்கு வந்த கடிதத்தைப் பற்றி விபரித்தார்.

டாம் ஆச்சரியத்துடன் " மிக தைரியமாக செய்கிறார்களே. ஸிம்ஸன் ஆபீஸில் வந்து வாங்குவதென்றால் ஸிம்ஸனையே ஏமாற்றுவது சுலபமாக கருதுகிறார்களல்லவா?"

"நானும் அவ்வாறுதான் நினைக்கிறேன். இருந்தாலும் ஸிம்ஸன் மிக கெட்டிக்காரரென்று எனக்கு தெரியும்" என்று பென்டன் சொன்னார்.

"இதற்கிடையில் உங்களால் இந்த இரத்தசின்ன சங்க மர்மத்தை இன்னும் கண்டுப்பிடிக்க முடியவில்லையென்று உங்களின் மேலதிகாரி உங்களை விடமாட்டார்களே"

"ஆம் அதற்கென்ன செய்வது. நான் கஷ்டப்படுவது எனக்குத் தான் தெரியும். அதிருக்கட்டும், உனது சினேகிதிக்கு புது வேலை கிடைத்திருக்கிறதே தெரியுமா?"

"யார்? குலோரியாவா?"

"ஆம். ஸிம்ஸனே அவளுக்கு வேலைகொடுத்திருக்கிறார்"

"என்ன வேடிக்கையாக சொல்கிறீர்கள்?"

"முதலில் ஸிம்ஸன் என்னிடம் சொல்லும்போதும் நானும் அவ்வாறே நினைத்தேன். உண்மையிலேயே வேலைக்கு வைத்திருக்கிறார்"

இவ்வாறு இருவரும் பேசிக்கொண்டே ஜன்னலினருகே வந்தனர்.

"அதோ பாருங்கள்! குலோரியா!" என்றான் டாம். குலோரியா தெருவில் வருவதை டாமுக்கு முன்பே பென்டன் பார்த்தார். தெருவில் வந்த குலோரியா டாம் வீட்டின் பக்கமாக திரும்பி நடந்தாள்.

"இங்கேதான் வருகிறாள். எதற்கு?" என்று டாம் சொல்லிக் கொண்டே வாயலினருகே ஓடினான். குலோரியா வந்து மணி அடிப்பதற்குள் டாம் கதவை திறந்தான்.

"ஆ! குலோரியா! வந்ததைப்பற்றி மிக சந்தோஷம். உள்ளே வா. உள்ளே உனது சிநேகிதரும் யிருக்கிறார்"

குலோரியா யோசித்தவாறு "இன்ஸ்பெக்டர் பென்டனா?" என்று கேட்டாள்.

"ஆம் கண்டுபிடித்துவிட்டாயோ! என்னிடம் தனியாக பேச வேண்டுமா?"

"இல்லை. ஸிம்ஸன் உங்களிடம் ஒரு விஷயம் கேட்டுவரச் சொன்னார். ஆற்றோரமுள்ள உங்களது வீட்டின் சாவியை கேட்டுவாங்கி வரச் சொன்னார்"

இருவரும் பேசிக்கொண்டே பென்டன் யிருக்குமிடத்திற்கு வந்தனர். டாம் பென்டனிடம் குலோரியா வந்த காரணத்தைத் தெரிவித்து, "எனது தகப்பனருக்கு ஆற்றோமாக ஓர் பாழடைந்த வீடு யிருக்கிறது. அதை தற்போது ரிப்பேர் செய்து ஒழுங்கு படுத்தலா மென்றால் அந்த சொத்தின் மதிப்புக்கு மேல் பணத்தை செலவழிக்க வேண்டியதாக யிருக்கிறது. தற்போது யாரும் அங்கு குடியிருக்க வில்லை. முன்பு அதை விற்பதற்காக மாரீஸ் மூலமாக தகப்பனர் எவ்வளவோ முயற்சித்தார். தற்போது மாரீஸ் அவ்வீட்டில் ஒளித்துக் கொண்டிருக்கலா மென்று ஸிம்ஸன் நினைக்கிறாராம். அங்குஇருப்பாரா?"

பென்டன் சிறிது நேரம் யோசித்து "எனக்கு தெரிந்தவரை மாரீஸ் ஊரைவிட்டு வெளியே போயிருக்க மாட்டார். ஆனால் அந்த வீட்டிலிருப்பார் என்று நானும் நினைக்கவில்லை. இருந்தாலும் இருக்கலாம். அவ்விடத்து சாவி அவரிடம் உண்டா? அது வசிக்கக் கூடிய வீடா?" என்று கேட்டார்.

"அதில் பாதி வீடும் பாதி கிடங்கும் என்று கேள்விப்பட்டிருக்கிறேன். நான் இன்னும் போய்ப்பார்க்கவில்லை. பழைய காலத்தில் ஏதோ வியாபாரிகள் தங்கி வியாபாரம் செய்து வந்ததாகவும் கேள்வி" என்று டாம் சொல்லிக்கொண்டே, தனது மேஜையின் ஒரு டிராயரைத் திறந்து அதிலிருந்து நிறைய சாவிகளாக எடுத்தார். ஒவ்வொரு சாவிக்கும் ஒவ்வொரு லேபில் கட்டப்பட்டிருந்தது. அதில் தேடி ஒன்றை எடுத்து,

"இதுதான் அந்த சாவி" என்று சொல்லி குலோரியாவிடம் கொடுத்து "உனது புதிய வேலை எப்படி யிருக்கிறது?" என்றுகேட்டான்.

அவள் சிறித்துக்கொண்டே "நல்லதான் யிருக்கிறது. இன்று காலையிலிருந்துதான் செய்வதால் எவ்வாறு சொல்லுவது" என்று சொல்லிக்கொண்டே பென்டன் பக்கம் திரும்பி "இனி உங்களுக்கு ஒன்றும் கஷ்டம் கொடுக்கமாட்டேன். அந்த ஆபீஸில் பேப்பர் வெய்ட் மாத்திரம் வெள்ளியால் செய்தது ஒன்றுண்டு. வேறு திருடுவதற்கு அங்கு ஒன்றும் கிடையாது" என்றாள்.

"நீ ஒரு நூதனமான பெண் ஆனல் உன்னில் நற்குணங்களும் உண்டென்பது எனக்குத் தெரியும். இருந்தாலும் ஜாக்கிறதை" என்றார் பென்டன்.

அவள் சிறித்துக்கொண்டே "நானும் ஜாக்கிறதையாகத்தானிருக்கிறேன். ஏதாவது அபாயத்தில் சிக்கினல் உங்களுக்கு உடனே தெரியப்படுத்துகிறேன்" என்று சொல்லிச் சென்றாள். (தொடரும்.)

# ஜவாஹிறுல் பவாயித்.

ஆறும் பதிப்பு

இப்புத்தகத்தில் 1-வது அல்லாஹு தஆலா வின் திருநாமங்களாகிய 'அஸ்மாஉல் ஹுஸ்னு' என்னும் அழகிய 99-இஸ்முகளும், ஒவ்வொன் றுக்கும் தனித்தனியே தர்ஜுமாக்களும் தக் ஸீறுகளும், காஸியத்துகளும்; 2-வது 'அஸ்மா உல் இலாம்' அதாவது நபிமார்கள் ஓதி வந்ததும் ஷர்ஜ விட்டும் தனித்ததுமான 40-அஸ்மாக் களும், அவைகளில் வெளியாகும் அநேக கைபி யத்து, அஜாயிபு முஃஜிஸாத்து, அஸ்ருறு முத லான மட்டில்லாத பிரயோஜனங்களும்; 3-வது 'ஹயாத்துல் ஹைவான்' என்னும் உயிர்பிராணி கள் சகல ஜந்துகள் ஒவ்வொன்றின் குணகுணங் களும், அவைகளின் அவயவ மென்னும் அங்கங்களால் மனிதர்களுக்கு உண்டாகும் பற்பல வியாதிகளுக்கு அவிழ்தங்களும், இன்னும் ஹதீது களும், ஹிக்காயத்துகளும்; 4-வது மனுமுடைய தஃபீர் என்னும் கனவு நூலும், அதில் எவ் வண்ணமாய் கனவு கண்ட காக்ஷிகளுக்கும் விரிவாகிய தஃபீர்களும், அதற்கு அத்தாக்ஷியாகிய அநேக ஹிக்காயத்துகளும்; 5-வது வைத்திய சுருக்க மென்னும் சகல வியாதிகளுக்கும் நுட்ப பரிகாரங்களும், இன்னும் அநேக பாயிதாக்களும் இருக்கின்றன. இவற்றின் அரபு இஸ்முகளை மாத்திரம் லெத்தோ கிருப்பில் அரபியிலும் மற்றவை யெல்லாம் சுத்த தமிழாலும் அச்சிட்டு கலிகோ பைண்டு செய்யப்பட்டது. விலை ரூ. 6

---

கிடைக்குமிடம்:—

ஹாஜி M. A. ஷாஹுல் ஹமீது & ஸன்ஸ்,

நெ. 20, ஹை ரோட், திருவல்லிக்கேணி, மதறாஸ் 5.




# உணவு உண்பது எதற்கு ?

(மஆலிசாஹிப் பாகவி)

'நாம் எதற்காக உணவு உண்ணுகிறோம்' என்பதற்கு குழந்தைகள் கூடத்தான் பதில் சொல்லிவிடுவார்கள்; அதாவது உயிருடன் இருப்பதற்காக உணவு உண்ணுகிறோம் என்பதே அந்தப் பதில்.

இது சரியான விடைதானா ? உயிருடன் இருப்பதற்குத்தான் நாம் உணவு உண்ணுகிறோ மென்றால், நாம் உணவு உண்ணாமலிருந்தால் உயிர் போய்விடும் என்றல்லவா அர்த்தமாகிறது. உண்மையில், உண்ணாமல் இருப்பதனால் மனிதன் செத்துப் போய்விடமாட்டான்.

உணவு உட்கொள்ளாமலேயே எத்தனையோ ஜீவன்கள், பன்னாள் உயிருடன் இருந்து வருகின்றன. வெறுங்காற்றை மட்டும் உணவாகக் கொண்டு உயிர்வாழும் ஜீவன்களும் உண்டு, தண்ணீரை மட்டும் ஆகாரமாகக் கொண்டு ஜீவித்துக்கொண் டிருக்கும் ஜீவன்கள் கோடிக் கணக்கானவை யுண்டு.

## தேரையின் உணவு

கல்லை உடைக்கிறான் கல்தச்சன். அதாவது ஒரு பாறையை இரண்டாகப் பிளக்கிறான். அதற்குள்ளிருந்து தவளையைப் போன்றுள்ள ஒரு ஜந்து உயிருடன் குதித்து துள்ளி வந்து விழுகிறது. அதன் பெயரை 'தேரை' என்று சொல்லுகிறோம். கல்லுக்குள் இருந்த காலத்தில் அந்தத் தேரை எவ்வித உணவையும் உட்கொள்ளாது ஜீவித்துக் கொண்டிருந்ததா. இந்த மகிமையை உதாரணமாகக் காட்டி வேதாந்திகள் "கல்லினுள் தேரைக்கு உணவளிக்கும் கடவுள்" என்று ஞான உபதேசம் செய்கிறார்கள்.

கல்லினுள் இருந்த தேரை உணவு உட்கொள்ளாமலா ஜீவித்துக் கொண்டிருந்தது ? இல்லை. அங்கும் அதற்குக்கேற்ற மாதிரியான ஒரு வகை உணவு கிடைத்துக்கொண்டிருந்தது. அதென்ன ரகத்தைச் சேர்ந்த உணவு என்பது நமக்குத் தெரியாது. அந்த உணவு காற்றுமில்லை; ஜலமுமில்லை; திரவ பதார்த்தமுமில்லை; புழு பூச்சி ஜந்துக்களுமில்லை. பின் என்னவெனில், அதில்தான் ஆண்டவனுடைய 'குத்ரத்' என்னும் இயற்கை சக்தி அமைந்திருக்கிறது.

187039

## சிசுவின் உணவு

ஒரு சிசு, தாய்வயிற்றில் ஒன்பது மாதம் இருந்து பத்தாவதுமாதம் வெளிப்பட்டு வருகிறதே அந்தச் சிசு, ஒனபது மாதமாக என்ன உணவை உட்கொண்டு ஜீவித்துக் கொண்டு இருந்தது? இது சிந்தித்துப் பார்க்கத் தக்க ஒரு பெரிய தத்துவ வேதாந்த விஷயமாகும்.

மனிதன் உயிர் வாழ்வதற்கு காற்றுவேண்டும், தண்ணீர் வேண்டும், உஷ்ணம் வேண்டும், திரவ பதார்த்தம் போன்ற உணவு பொருள் ஏதேனும் வேண்டும். இதெல்லாம், கர்ப்பத்துள் மறைந்துக்கிடந்த அந்த சிசுவுக்கு எங்கிருந்து கிடைத்தது? இதுவும் ஆண்டவனுடைய 'குத்ரத்' என்னும் மகாத்மியமே யாகும். ஆனுல் விஞ்ஞான ரீதிப்படி வாதிப்பவர்களும் டாக்டர்களும் கூறும் கூற்றுக்கள் ஒத்துக்கொள்ளக் கூடியதாயினும் அது அவர்களின் மூளைக்கு எட்டியவரை யுள்ள வாதமே யாகும். சிசுவின் உணவு என்ன வென்பதை டாக்டர்கள் கண்டுபிடிக்க முடியவில்லை என்பது ஒரு வாதம்.

கர்ப்பத்துள்ள சூல் கொண்டிருக்கும் ஒரு தாயைக் கேட்டுப் பாருங்கள்- வயிற்றிலுள்ள சிசுவுக்கு எப்படி உணவு கிடைக்கிறதென்று!

"இது தெரியவில்லையா உங்களுக்கு! நாம் உண்ணும் உணவுதான் சிசுவுக்கும் போய் சேருகிறது" என்று, தாய் வெகு சாதாரணமாக பதில் சொல்லிவிடுவாள். ஆம், அவள் சொல்லுவது முற்றும் உண்மையே. தாயின் உணவே சிசுவுக்கும் உணவாகப் போய் சேருகிறது. சிலர்க்கு, இந்த வாதமும் ஆச்சரியமாய் இருக்கிறது. தாயார் குடிக்கும் கூழ் பிள்ளைக்கும் போய் சேருகிறதா? அவள் உண்ணும் ரொட்டியும் வெண்ணையும் சிசுவுக்குப்போய்ச் சேருகிறதா? அவள் உண்ணும் பிரியானியும் புலாவும் அவளது சூலுக்குள் உள்ள சிசுவுக்குப் போய்ச் சேருகிறதா? குழந்தை கூழையும், ரொட்டியையும், பிரியானியையும் மாமிசத்தையும் சுவைத்து ஜீரணிக்க முடியுமா? இல்லை!

தாய் எந்த உணவு உட்கொண்டாலும் அதிலிருந்து உற்பத்தியாகும் அதி நுண்ணியமான ஜீவசத்து மாத்திரம்தான் சிசுவுக்குப் போய், ஆகாரமாய்ச் சேருகிறது. தாயின் உதிரக்கட்டியே, அமுதமாய் மாறி, குழந்தைக்கு உணவாக பரிணமிக்கிறது என்று சாதாரணமாகக் கூறலாம்.

## நாம் உண்ணும் உணவு

உணவு என்ற பெயர் ஒன்ருக இருப்பினும், உணவுப் பொருள் வகைகள் கோடிக்கானவை யாகும். எறும்பும் உணவு உட்கொள்கிறது. யானையும் உணவு உட்கொள்கிறது. அதற்கும் இதற்கும் எத்தனைப் பெரிய வித்தியாசம். யானை வாழை மரத்தை அப்படியே

வாயில் போட்டு நசுக்கி உண்டுவிடுகிறது. எறும்போ ஒரு சிறு தானியத்தையும் ஓரேயடியாய் உண்ண முடியாமல், அதைப்பல நாட்களுக்கு உணவாகப் பகிர்ந்து உண்டு உயிர் வாழ்கிறது.

## கொசுவின் உணவு

இவ்வாறேதான் ஒவ்வொரு ஜீவஜந்துக்கும், வெவ்வேறுவிதமான உணவுப் பொருட்கள், வெவ்வேறுவகை ரூபங்களில் போய்ச் சேருகின்றன. சில ஜீவன்கள் உண்ணும் உணவுகளை நாம் கண்ணாரக் காண முடிகிறது, சில ஜீவன் உண்ணும் உணவுகளை நாம் கண்ணால் காண முடியவில்லை.

அற்பப் பிராணியாகிய கொசுவும், விட்டிற் பூச்சியும் என்ன பொருளை உணவாக உட்கொள்ளுகின்றன என்று நம்மால் கண்டுபிடிக்க முடிகிறதா? அது போகட்டும். சமுத்திரத்திலுள்ள யானையையே விழுங்கிவிடும்படியான பெரிய பெரிய திமிங்கல மீன்கள் இருக்கின்றனவென்று கண்டோர் சொல்கிறார்கள். அந்தப் பெரிய மகா ஜீவன்கள் எதை உணவுப் பொருளாக உட்கொள்கின்றனவென்று நம்மால் கண்டுபிடித்துச் சொல்ல முடிகிறதா?

## உணவு எத்தனை வேளை?

ஜீவன்கள் எதை உணவாக உட்கொள்ளவேண்டும், எவ்வளவு உணவை உட்கொள்ளவேண்டும்? ஒருநாளைக்கு எத்தனை தடவை உட்கொள்ள வேண்டும்? என்பதிலெல்லாம் இயற்கையின் பிரகாரம் வரம்பு முறையுண்டு. பெரும்பாலான ஜீவப் பிராணிகள் பகலில் மாத்திரம்தான் உணவை உட்கொள்ளுகின்றன; சில பிராணிகள் இரவில் மட்டும்தான் உணவு தேடச் செல்லுகின்றன. இன்னும் சில ஜந்துக்கள் ஒருநாள் உணவு உட்கொண்டு விட்டுப் பலநாள் வரை ஏதும் உணவு உட்கொள்ளாமலே இருந்து விடுகின்றன.

எனவே ஒவ்வொரு பிராணியும் ஒவ்வொரு ஜந்துவும், உணவு விஷயத்தில் கட்டுப்பாட்டை அனுஷ்டித்து, இயற்கை தர்மம் மீறாமல் உணவு உண்டு உயிர்வாழ்ந்து வருகின்றன.

## ஒழுங்கு மீறும் மனிதன்

இயற்கையின்படி கட்டுப்பட்டு நடக்கும் உயிர் பிராணிகள் இயற்கை நியதியை மீறி மீதூண்மேற் கொண்டாலோ, தகாத உணவை உட்கொண்டாலோ, ஒரு வேளைக்கு இருவேளையாக உட்கொண்டாலோ, அல்லது ஒழுங்கைமீறி நடந்து கொண்டாலோ, அவை உடனே நோயுற்றுச் செத்துப்போய் விடுகின்றன.

ஆனால் மனிதன் மட்டும்தான் இயற்கையையும் மீறி, செயற்கைக்கும் கட்டுப்படாமல், மனம்போன போக்கெல்லாம் சென்று; தகுந்ததும்

தகாததுமான ஆகாரப் பொருள்களை யெல்லாம் உணவாக உட்கொண்டு, வேதவிதியையும் மீறி, நியாயவரம்பையும் கடந்து, கட்டுப்பாட்டையும் உடைத்தெறிந்து, காலா கோலமாக வெல்லாம் நடந்துழன்று கெட்டுப் போகிறுன்.

மனிதன் உணவுப் பொருளில் மட்டுமல்ல, பொதுப்படையாய் எல்லா விவகாரங்களிலுமே ஒழுங்கு கெட்டுப் போகிறுன். காலால்தான் நடக்க வேண்டும் என்று நம்மை சிருஷ்டித்த கடவுள் கட்டளையிட்டிருந் தும் அவன், தலையால் நடக்கமுடியுமா? கையால் நடக்கமுடியுமா? என்றெல்லாம் ஆராய்ச்சி செய்து, அனுபவித்துப் பார்க்கிறுன்.

இயற்கையை மீறி நடப்பது, ஒழுங்கை கடந்து போவதும் மனித னுக்கு சுபாவமாக மாறிப்போய்விட்டது. ஆகாயத்தில் பறக்கவும் மனிதன் முற்பட்டு விட்டான். தண்ணீருக்குள் நுழைந்து செல்வது அவனுக்கு சர்வசாதாரண காரியமாய்விட்டது.

இவ்வாறேதான் கல்லை உடைப்பதும், மலையைக் கெல்லி எறிவதும், கடல் ஆழத்தை அளந்துப் பார்ப்பதும், உயர்வான கட்டிடத்தை கட்டுவதும், அதை இடித்துத் தரை மட்டமாக்குவதும் மனிதனுக்கு வேடிக்கை விநோதமான காரியமாய் போய் விட்டது.

## உண்பது எதற்கு?

இப்படியாக மனிதன், ஒவ்வொரு விவகாரத்திலும் இயற்கையையும் விதியையும் மீறிக்கொண்டே வந்து, இறுதியாய் உணவு உண்ணுமலே மனிதன் ஜீவிக்க முடியுமா என்று ஆராய்ந்து பார்க்கத் தொடங்கி விட்டான். முதலில் ஆகாரத்தின் அளவை குறைப்பதற்காக பிரயத்த னப்படுகிறுன்; சத்துள்ள சிறு மாத்திரையை வாயில் போட்டுக்கொண்டு ஆகாரத்தின் அளவை மீறிப்பார்த்தான். அதில் தோல்வியை கண்டான். எனவே, உணவு உண்ணுமல் உயிர்வாழ முடியாதென்பதை மனிதன் கண்டுகொண்டான்.

மனிதன் உண்பதில் ஓர் வரம்பு முறையை ஏற்படுத்தி, தினமும் ஒரிருவேளையாவது உணவு உட்கொண்டுதான் தீரவேண்டும். அவனவன் ஜீரணக் கருவிக்கும் சீதோஷ்ணத்துக்கும் தேச வழக்காசாரத்துக்கும் ஏற்ற வகையில் உணவு முறையையும், உணவு வகையையும், உணவு அளவையும் நிர்ணயம் செய்து கொண்டு, நேர்மையாய் மிதமாக உண்டு வாழவேண்டியது மனிததர்மமும், இயற்கையின் கட்டளையும், தெய்வத் தின் கல்பனையுமாகும்.

எனவே, சுகபோகத்துக்காக உணவு உட்கொள்ளாமல், ஆரோக் யத்துடன் உயிர் வாழ்வதற்காக நல்ல உணவு உண்டு இனிது உயிர் வாழ்வோமாக.

# காஜா நிஜாமுத்தீன் ஔலியா அவர்களின் ஜீவிய சரித்திரம்.

(அய்யம்பேட்டை, S. அப்துல் ரஜாக் ஸாஹிப்)

## (6—வது பகுதி)

ஹஸ்ரத் நிஜாமுத்தீன் ஔலியா அவர்களைப்பற்றிய பிரஸ்தாபம் அதிகரித்துக் கொண்டிருப்பதை மக்காவாசிகள் கேள்வியுற்றார்கள். ஆனால் ஹஸ்ரத் அவர்கள் 'ஹஜ்ஜை' நிறைவேற்றவில்லை என்ற குறையைப்பற்றி அவர்கள் எடுத்துரைத்தபோது அதே சமயம் அவ்விடம் ஆஜராகவிருந்த இரண்டு பெரியார்கள் அதைப்பற்றி தாக்கிப் பேசினார்கள்.

அவர்கள் தாக்கிப் பேசிய மறுப்பு விஷயம் யாதெனில்:— "நாங்கள் சென்ற நாற்பது வருஷங்களாயும் கஅபாவின் முஜாவிர்களாக இருந்து வருகிறோம். மௌலானா நிஜாமுத்தீன் காலைத் தொழுகையை அனுதினமும் கஅபா பள்ளிவாசலில் ஜமாஅத்துடன் குறித்த நேரத்தில் தொழுது கொள்ளுகிறார் என்பதை நாம் பார்த்து வருகிறோம்''.

முஜாவிர்கள் சொல்லிய சாட்சியத்தின் பிரஸ்தாபத்தை மக்காவாசிகள் மாத்திரமின்றி டில்லி ஹாஜிகளும் செவியுற்று ஹஜ்ரத் ஔலியா அவர்களின் முரீதுகளுக்கு அவ்வதிசயத்தைப் பற்றி விவரித்தார்கள்.

ஆனால் அதை செவியுற்றவர்களுள் யாருக்கேனும் அதைப்பற்றி ஹஸ்ரத் ஔலியா சமுகத்தில் விசாரிக்கும்படியான துணிச்சல் அப்போது ஏற்படவில்லையாதலால் எல்லோரும் மௌனஞ் சாதித்தனர்.

ஒரு முறை ஹஸ்ரத் ஔலியா அவர்கள் தம் ஹுஜ்ராவில் (அறையில்) வீற்றிருந்தார்கள். அவ்வமயம் அவர்களின் முரீதொருவர் உலுச்செய்வதற்காக பாத்திரத்தில் ஜலத்தை ஊற்றிக்கொண்டு அறை வாயிலில் காத்துக்கொண்டிருந்தார். வெகு நேரம் சென்றபின்னரும் ஹஸ்ரத் அவர்கள் அந்த ஊழியரிடமிருந்து ஜலம் வாங்கிக்கொள்ளாததால், ஒருக்கால் ஹஸ்ரத் அவர்கள் மெத்தை வீட்டில் இருப்பார்களோ என்ற சந்தேகத்தின் பேரில் அவர் முதலில் அறைக்குள் நுழைந்து பார்த்தார். அப்பால் மெத்தைக்குச் சென்று எப்புறமும் தேடினார், எந்த தோரிடத்திலும் ஹஸ்ரத் அவர்கள் இல்லை எனத் தெரிந்ததும், அவர், அறை வீட்டின் வழியே வெளிவந்து அறையின்

கதவையும் வெளிப்பக்கத்தில் தாழ்பாளிட்டு, முன்னர் நின்று கொண்டிருந்த விடத்திலேயே மறுபடியும் நின்று விட்டார். கதவை தாழ்பாளிட்ட சிறிது நேரத்திற்குள் ஹஸ்ரத் ஔலியா அவர்கள், ஊழியரைக் கூப்பிட்டு தண்ணீர் கேட்டார்கள். ஊழியர் ஹஸ்ரத் சத்தத்தைக்கேட்டு பிரமித்து விட்டார்.

ஹஸ்ரத் அவர்கள் எங்கும் தென்படாமற் போனபோது அவர்கள் நிச்சயமாகவே தொழுகைக்காக 'கஅபா' பள்ளிக்கு போயிருப்பார்கள் என்றும், ஹாஜிகள் வாயலாய் தாம் அதுபற்றி கேட்ட விஷயம் உண்மைதான் என்றும் நம்பவும் அவருக்கு தம் மனமே சாட்சியாய் விட்டது.

அப்பால், அவர் ஹஸ்ரத் ஔலியா விடத்தில் "நான் தங்களை தேடியபோது தாங்கள் தென்படாமல், கதவை தாழ்பாளிட்டதும் தாங்கள் எங்கிருந்தோ வந்து என்னைக் கூப்பிட்டீர்கள், நான் தங்களைப் பற்றி கேள்விப்பட்டதற்கும் இப்போது நான் பார்த்த அதிசய சம்பவத்திற்கும் கவனிக்குமிடத்து தாங்கள் 'கஅபா' பள்ளிக்கே போயிருந்திருப்பீர்கள் என்று நம்புகிறேன்" என்று பயந்தும் ஒடுங்கியும் முறையிட்டார்.

அதைக்கேட்ட ஹஸ்ரத் ஔலியா அவர்கள் கண்களில் நீர் ததும்பியது. "நான் அத்தகைய மகிமைக்கு தகுதி வாய்ந்தவனல்ல. ஆனால் இது ஏதோ ஆண்டவன் கிருபையைக் கொண்டு நடக்கிறது அதாவது இந்த வீட்டின் கூரையிலிருந்து ஒரு பெண் ஒட்டை இறங்கி வந்து என்னை தன் முதுகின்மேல் ஏற்றிக்கொண்டு நேரே 'கஅபா'வுக்குப் போகிறது. அங்கு நான் தொழுகையை நிறைவேற்றிக்கொண்டவுடன் அவ்வொட்டை அதே விதமாக என்னை மீண்டும் ஏற்றிக்கொண்டு இங்கு கொண்டு வந்து சேர்ப்பித்து விடுகிறது" என்று விவரித்தார்கள்.

ஹஸ்ரத் நிஜாமுத்தீன் ஔலியா அவர்களுக்கு 91-வது பிராயம் எட்டியது. இப்போது அவர்களுக்கு இருந்தாற்போலிருந்து 7 நாள் வரை மலஜல பாதைகள் தடை பட்டன.

8-வது தினம் ஹஸரத் ஔலியா அவர்கள், தம் சொந்த காரியஸ்தரான காஜா இக்பாலை தம்மிடம் அழைத்து 'உம் கைவசத்தில் இருக்கப்பட்ட சொந்த பணத்தை எனக்கெதிரில் கொண்டு வந்து வையும்' என்று உத்தரவளித்த போது அவர் "ரொக்க பணம் ஏது? அதுவோ அன்றாடம் செலவழிந்து போகிறது. ஆனால் இன்றைய அவசியத்திற்குரிய தானியம் ஆயிரம் மணங்கு தயாரா யிருக்கிறது" என்றபோது "அதையாவது இப்போது கொண்டு வந்து ஏழை மிஸ்கீன்களுக்கிடை பகிர்ந்து விடும்" என்று ஆக்ஞாபித்தார்கள்.

அடுத்தாற் போல் ஹஸ்ரத் அவர்கள் மூட்டை எடுத்து வரும் படிச் சொல்லி அதிலிருந்து தலைப்பாகை 1, சட்டை 1, தொழுகை விரிப்பு 1, கிலாபத் அத்தாட்சிப் பத்திரம் 1 இவைகளை எளிய மௌலானு புர்ஹானுத்தீன் அவர்களுக்கு அருள் புரிந்து அவர்களை தென் திசைக்கு புறப்பட்டு போகும்படியும் உத்தரவிடப் பட்டது.

அதே போல் இதர ஒவ்வொரு கலீபாவுக்கும் ஹஸ்ரத் ஔலியா அவர்கள் ஆடையளித்தார்கள்.

இச்சமயம் ஹஸ்ரத் ஷய்க் நஸீருத்தீன் சிராகெதெஹலி (டில்லியின் விளக்கு) ஆஜராகாததால் சபையோர்களுக்கு கவலை ஏற்பட்டது. அதன் பேரில், ஹஸ்ரத் ஔலியா அவர்கள் ஹஸ்ரத் ஷெய்க் நஸீருத்தீன் அவர்களை தருவித்து "சிஷ்தியா" வமிசத்தில் பரம்பரையாக வழங்கப்பட்டு வந்த 'தபர்ருகாத்' (அரிய பொருள்கள்) யாவும் அவர்களுக்கு கொடுத்தார்கள். ஹஸ்ரத் ஔலியா அவர்களுக்கு அவர்களது முர்ஷித் அருள் புரிந்த சில புனித சின்னங்களும் இச்சமயம் ஷய்க் நஸீருத்தீன் அவர்களுக்கு அருளப் பட்டன. இந்த அலுவல்கள் அஸ்ரு தொழுகை நேரத்திற்கு முன்னரே முடிவுற்றன.

அப்பால் அஸ்ரு தொழுகை நேரம் முடிந்து சூரியன் அஸ்தமாகும் தறுவாயில் இந்த இர்பான் சூரியனுகிய ஹஸ்ரத் நிஜாமுத்தீன் ஔலியா அவர்கள் இம்மண்ணுலகை விட்டும் விண்ணுலகிற்கு எய்தினுர்கள்.

அவர்கள் மரண சம்பவம் 725-வது ஆண்டு ரபீயுல் ஆகிர் மீ' 17-ந் தேதி புதன் கிழமை தினம் நிகழ்ந்துள்ளது. ஹஸ்ரத் அவர்களின் வயது 94 என்றும் சிலர் எழுதியுள்ளார்கள்.

"ஷாஜஹான் ஆபாத்" ஸ்தலத்திற்கு சமீபமாயுள்ள கியாஸ்பூர் என்ற விடத்தில் அவர்கள் புனித சமாதி நிலை கொண்டிருக்கிறது. அவர்களின் பிறப்பும் இறப்பும் ரபீயுலவ்வல் மாதத்திலேயே நிகழ்ந்துள்ளன.

மஹான் ஷய்க் "சோந்தா ஸாபிரி" அவர்கள் முரீதுகளுள் ஒரு தர்வேஷ் ஆனவர், கஷ்புல் குபூர், ஆலமே அர்வாஹ் (கபுருகளில் நல்லடக்கம் செய்யப் பட்டுள்ள மையத்துக்களின் ஆத்மாக்களுடன் பேசும் திறமை) சக்தியை தம் அரும் பெரும் வணக்கப் பிரயாசையைக் கொண்டு அடைந்திருந்தார்.

அன்னுர் சம்பந்தமாக அவரது பீர்பாய் (அவருடன் முரீது வாங்கி யிருந்த சகோதரர்) தாம் இயற்றிய கிதாபில் பின் வருமாறு எழுதுகிறுர் :—

ஒருநாள் என் சகோதரர், ஹஸ்ரத் நிஜாமுத்தீன் ஔலியா அவர்கள் சமாதிக்குச் சென்று அதன் அருகில் உட்கார்ந்து, முராகிபா

(அவதானிக்கை) செய்வதில் ஈடுபட்டார். அவ்வமயம் அவருக்கு ஒளி நிறைந்த ஆற்றுப் பாய்ச்சல் ஒன்று புலனாயிற்று. அதன் எப்புறத்திலிருந்தும் எழும் அலைகள் ஒளி நிறைந்திருந்தன.

இருந்தாற் போலிருந்து அதில் ஒளி நிறைந்த படகொன்றும் வரத் தென்பட்டது. அது சிறந்த நவரத்தினங்களைக் கொண்டு அலங்கரிக்கப்பட்டு, தன்னில் ஒரு மஹானையும் ஏற்றி வந்தது. அதன் பிரகாசத்தை சூரிய பிரகாசத்திற்கு ஒப்பிடுங்கால், சூரிய பிரகாசம் அதன் ஓர் நுட்பத்திற்கு சமமாக விருந்தது.

தர்வேஷ், நதியிலிறங்கி அம்மஹானை யணுகினர். அவ்வாறு அவர் படகை யணுகினதும் அரியதோர் பரிமளவாசனை அவரையும் கவர்ந்து கொண்டது. அடுத்தாற் போல் அவர் இவ்வளவு செய்நேர்த்தியுடன் படகில் வீற்றிருந்த அம்மஹானை நோக்கி "தாங்கள் யார்?" என்று வினவியபோது அவர்கள் "நான் தான் நிஜாமுத்தீன் பதாயூனி என்பவன் இறைவனது காதலைக் கொண்டவன். அதனாலேயே அவனுடைய ஜோதிகள் என்னை சூழ்ந்து நிற்கின்றன. ஒளலியாக்கள் அதே ஜோதியைப் பெற அரும்பாடு படுகிறார்கள்" என்று விடை பகர்ந்தார்கள்.

அத்தகைய விடை பகர்ந்ததும் ஹஸ்ரத் அவ்லியா அவர்கள் ஓர் தலைப்பாகையை தர்வேஷுக்கு அருள் புரிந்து "இதைக் கொண்டு போங்கள். நான் உங்களுக்கு கராமத் அதாவது மகிமை வாய்ந்த வலியின் ஸ்தானத்தை அருள் புரிந்தேன்" என்று ஆசிர்வதித்தார்கள்.

'இக்திபாசுல் அன்வார்' என்ற கிதாபில் அதன் ஆசிரியர் ஆனவர், ஹஸ்ரத் ஒளலியா அவர்கள் அந்த தர்வேஷுக்கு தலைப்பாகை அருள் புரிந்ததை யொட்டி "தர்வேஷ், ஜீவித்திருந்த காலம் வரையில் அவருடைய சரீரத்தி லிருந்தும், ஆடைகளி னின்றும் நற்மணம் வீசிக் கொண்டிருந்ததென்றும் அதன் பொருட்டு அக்கம் பக்கத்திலுள்ளவர்களுக்கும் அந்த மணமாகப்பட்டது அவர்களின் உள்ளங்களை குளிரச் செய்து வந்த தென்றும் தர்வேஷ் மவுத்தான பின்னரும் அவரது ஆடைகளி லிருந்து அம்மணம் அகன்று விடவில்லை என்றும்" வரைந்துள்ளார்.

(தொடரும்.)

18039

Edited by M. S. ABDUL KHUDUS.
Published by Hajee M. A. Shahul Hameed & Sons.
Printed at Shahul Hameedia Press, Madras.

# மஜ்மூஅ முனாஜாத்.

சுத்தத் தமிழ்

(இரண்டாம் பதிப்பு)

இந்த புஸ்தகத்தில் ஹக்கு பேரில் முனாஜாத்து, யாஸை யிதி மாலை, யாகுத்பா மாலை, தலைப் பாத்திஹா, ஸலவாத்துப் பாட்டு, முத்துமணி மாலை, பக்தி ஆனந்த பாத்தி முத்து மாலை, முஹியித்தீன் முனாஜாத், காஜா பந்தே நவாஸ் முனா ஜாத், ஸரசுவதி மாலை, காஸிம் புலவர் இன்னிசை, கலியாண வாழ்த்துப் பதங்கள் ஆகிய இவைகள் சேர்ந்திருக்கின்றன.

இதன் விலை அணா. 8

ஷை அறபுத் தமிழ் விலை ரூ. 1—4—0

# பஞ்சரத்தின தாலாட்டு.

இது 1-வது ஞானத் தாலாட்டு, 2-வது பாத்திமா நாய கத்தின் பேரில் சுகானந்தத் தாலட்டு, 3-வது முஹியித்தீன் ஆண்டவர்கள் பேரில் மணிமந்திர தாலாட்டு, 4-வது ஷாஹுல் ஹமீது ஆண்டவர்கள் பேரில் மீரான் தாலாட்டு, 5-வது பாலர் களுக்கு வாழ்த்தக்கூடிய பாலர் தாலாட்டு ஆகிய ஐந்து தாலாட் டுகள் சேர்த்து நேர்த்தியான காகிதத்தில் அச்சிடப்பட்டிருக் கிறது.

விலை அணா. 3

ஷை அறபுத் தமிழ் விலை அணா. 10

# பன்னிரண்டு மாலை.

இது கீழக்கரையி லடங்கி மறைந்திரா நின்ற மெஞ்ஞான சொரூபராகிய காமிலொலி ஷெய்க் அப்துல் காதிர் லெப்பை ஆலிம் ஸாஹிபு அவர்களால் பாடியது. இதில் தரீகத்து மாலை, ஹகீகத்து மாலை, மஃரிபத்து மாலை, தவ்ஹீது மாலை, சிர்று மாலை, திக்று மாலை, பிக்ரு மாலை, உஜூது மாலை, ஷுஹூது மாலை, அதபு மாலை, அறிவு மாலை, பயானுத்தீன் மாலை ஆக பன்னிரண்டு மாலைகள் சேர்ந்திருக்கின்றன.

சுத்தத் தமிழ் பதிப்பு விலை அணா. 8

ஷை அறபுத் தமிழ் விலை அணா. 14

---

கிடைக்குமிடம் :—

ஹாஜி எம். எ. ஷாஹுல் ஹமீது அண்டு ஸன்ஸ்

ஷாஹுல் ஹமீதிய்யா பிரஸ்,

நெ. 20, ஹைரோட், திருவல்லிக்கேணி, மதறாஸ் 5.

## முனாஜாத்து மாலிகை.

பன்னிரண்டு முனாஜாத்துகள் சேர்ந்திருக்கின்றன.

1-வது அல்லாஹுத் தஆலாவுடைய அஸ்மாவுல் ஹுஸ்னா வென்னும் தொண்ணூற்றொன்பது திருநாமங்களைக் கொண்டு கேட்கப்படும் முனாஜாத்தும், 2-வது ஹக்கத்தஆலாவின் பேரில் அலிபுபே இருப்பத்தொன்பது ஹர்புகளை ஆரம்பமாக வைத்து பாடப்பட்ட முனாஜாத்தும், 3-வது றஸூலுல்லா பேரில் முனாஜாத்தும், 4-வது அலி றலியல்லாஹு அன்ஹு அவர்களின் பேரில் முனாஜாத்தும், 5-வது பாத்திமா நாயகி அவர்களின் பேரில் முனாஜாத்தும், 6-வது இமாம் ஹஸன் ஹுஸைன் (றலி) அவர்களின் பேரில் முனாஜாத்தும், 7, 8-வது முஹியித்தீன் ஆண்டவர்கள் பேரில் முனாஜாத்தும், 9, 10-வது ஷாஹுல் ஹமீது ஆண்டவர்கள் பேரில் முனாஜாத்தும், 11-வது கல்வத்து நாயகம் ஒலியுல்லா அவர்கள் பேரில் முனாஜாத்தும், 12-வது கீழக்கரை ஷெய்கு ஷாஹுல் ஹமீது ஆலிம் அவர்கள் பேரில் முனாஜாத்தும் ஆக பன்னிரண்டு முனாஜாத்துகள் அடங்கிய அரிய நூல். இதன் விலை அணா. 5

ஷை அறபுத் தமிழ் விலை அணா. 12

## சைதத்துப் படைப்போர் வசன காவியம்.

இது ஹஜ்ரத் அமீறுல் முஃமினீன் அபூபக்கர் ஸித்தீக் றலியல்லாஹு அன்ஹு அவர்களின் குமாரர் அப்துல் றஹ்மான் றலியல்லாஹு அன்ஹு அவர்கள் அமீர் சுபியான் என்னும் ஒரு அரசனோடு வெகு சாமர்த்தியத்துடன் யுத்தஞ் செய்து அவனுடைய மகளாகிய செய்தத்துவை கலியாணஞ் செய்து மதினத்திற்கு வந்தது முதலிய விஷயங்கள் நிறம்பியுள்ள ஒரு அற்புதமான கிரந்தமாகும். இதை வாசிக்கவும் கேட்கவும் வெகு இன்பகரமாயிருக்கும். இதைப்பற்றி நிறம்பச் சொல்ல வேண்டியதில்லை. இதானது மலையாளம் குஞ்சு மூஸா புலவர் அவர்களால் செய்துள்ள செய்யிதத்துப் படைப்போர் என்னும் காவியத்தையே வசன ரூபமாகச் செய்யப்பட்டது.

வசனம் விலை அணா. 12 ஷை பாடல் விலை அணா. 12

கிடைக்குமிடம் :—

ஹாஜி எம். ஏ. ஷாஹுல் ஹமீது அண்டு ஸன்ஸ்

ஷாஹுல் ஹமீதிய்யா பிரஸ்,

நெ. 20, ஹைரோட், திருவல்லிக்கேணி, மதராஸ் 5.